
# முரசொலி

2

மு.கருணாநிதி

முரசு 1 | சென்னை 28—1—55 வெள்ளி | ஒலி


## நேருவின் சோஷலிச முன்னேற்றம்??



## மு.க.வின் 'தளிர்'

6-ம் பக்கம்

Best copy available

# வேற்றுமையில் ஒற்றுமையாம்! வேஷம் போடுகிறார்கள்

தென்னாட்டுப் பழமொழிகளே உலகை அளந்தவைகள் தான்! அந்த நாட்களிலேயே ஒரு அனுபவஸ்தன் சொல்லி வைத்தான், "தூரத்துப் பச்சை கண்ணுக்கழகு" என்று. இந்தமுதுமொழி — அனுபவ உண்மை— நமது பண்டிதருக்கு தெரிந்திருக்க முடியாததுதான். புதுவையிலே பேசியிருக்கிறார்; இந்தியா பெரிய நாடாக்கும்—சக்தி மிக்க நாடாக்கும் என்றெல்லாம் அந்தப் பெரியவர் — அரசியலில் தேர்ந்தவர். எவ்வளவுதான் பேசினாலும் ஓர் பேருண்மை அவரையும் அறியாமல் வெளிக்கொட்டி விட்டது. இந்தியா என்பது ஒரு நாடல்ல; அது ஓர் உபகண்டம். ஓர் உபகண்டத்தில்—பல தரப்பட்ட கலாச்சாரங்களைக் கொண்டவர்களை சேர்த்து ஆளுவது என்பது ஏகாதிபத்தியத்திற்கு புது மெருகு கொடுத்ததாகத்தான் பொருள் என்று நாம் பன்முறை ஆட்சி பீடத்திற்கு வலியுறுத்திய நேரத்திலெல்லாம், 'நாசக்காரர்கள்' என்ற பட்டத்தைத் தவிர வேறெதுவும் நமக்குப் பரிசாகக் கிடைத்ததில்லை. ஆனால் அதே கருத்தை பண்டிதர் வேறு வகையிலே கக்கிவிட்டார் — இந்தியா ஒரே நாடு அல்ல என்பதை ஒப்புக் கொண்டுவிட்டார்—சோறு உண்ணுவோரும் சப்பாத்தி சாப்பிடுவோரும் இருக்கிறார்கள் என்பதை சொல்லாமல் சொல்லி விட்டார். நாம் சொன்னபோது கோபப்பட்ட நேரு, நாம் வலியுறுத்தியபோது கோபக் கனலைக் கக்கிய நேரு, இப்போது வேற்றுமைகளிடையே ஒற்றுமை காணுகிறாராம் இந்த இந்தியத் துணைக்கண்டத்தில்.

இந்த மாதம் 16-ம்தேதி புதுச்சேரியிலே பண்டிதருக்கு வரவேற்பு! விலங்கொடித்த புதுவையில் இந்திய மூலவர் இப்போது தான் முதல் தடவையாகப் போனாராம்—பிரமாதமாக வரவேற்பு நடத்தப்பட்டதாம் — அந்தக் கூட்டத்திலேதான் மோதிலால் புதல்வர் சரித்திர பூர்வமான உண்மையை, புரட்சி செய்த காலத்திலே ஆங்கில ஏகாதிபத்தியத்தினிடம் எடுத்துக் கூறிய உண்மையை தன்னை அறியாமல் புதிய பிரஜைகளாம் புதுவை மக்களிடம் சொல்லிவிட்டார்— "வேற்றுமைகளிடையே ஒற்றுமை கண்ட நாடு இந்தியா" என்று. வேற்றுமைகளிடையே ஒற்றுமை!—என்ன அந்த வேற்றுமை? மொழிவேற்றுமை இருப்பது பண்டிதருக்குத் தெரியும்! கலைவேறுபாடு இருப்பதும் பண்டிதருக்குத் தெரியும்.

நாகரிகத்திலும்கூட வடநாட்டுக்கும் தென்னாட்டுக்கும் எதிரிடை என்பதை பண்டிதர் அறிவார். ஆனாலும் இந்த வேற்றுமைகளிடையே ஒற்றுமை கண்டு விட்டோம் என்று பெருமை அடித்துக் கொண்டிருக்கிறார். இந்த இடத்தில்தான் நமக்கு துவக்கத்திலே சொன்ன 'தூரத்துப் பச்சை கண்ணுக்கழகு' என்ற தென்புலத்து முதுமொழி நினைவுக்கு வருகிறது. டில்லியிலே இருந்து பார்க்கிறவர் பண்டிதர்—இந்தியா ஒற்றுமையாக இருப்பதாக டில்லியின் செங்கோட்டையிலிருந்து பார்த்தால் தூரத்திலே இருக்கின்ற மேடு பள்ளங்களா தெரியப்போகிறது? எல்லாம் சமதளமாகவும், ரம்மியமாகவும்தானே தெரியும்? திராவிடநாடு திராவிடருக்கே என்ற உரிமைக் குரல், மொழிவழி மாநிலக் கோரிக்கை, இந்தி வேண்டாம் என்ற எதிர்ப்புக் குரல், ஐந்தாண்டுத் திட்டத்திலே தென்னாட்டுக்கு இடமில்லையே என்ற கேள்விக் கணைகள் பண்டிதருக்குத் தெரியவா போகின்றன? ஒற்றுமை காணுகிறாராம் நேரு திருமகன்!

ஆவடி காங்கிரஸ் இந்தியாவின் ஒற்றுமைக்கு வழிகோலும் என்கிறார்கள் தேசியத் தலைவர்கள். இந்தியா பூராவும் ஒன்றுதான் என்கிறார் புதிய தலைவர் தேபார்—ஆனால் அங்கே தான் வடநாட்டுக்கு என தனி உணவு தயாரிக்கப்படுகிறது— "வடநாட்டு பிரதிநிதிகள் கவலை கொள்ள வேண்டாம்; அவர்களுக்கேற்ற பூரியும், சப்பாத்தியும் மாநாட்டுப் பந்தலில் பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டு வைக்கப்படும்" என்று பத்திரிகைகள் செய்தி தருகின்றன. எங்கே ஒற்றுமை? வேற்றுமையில் ஒற்றுமை காண்போரே, எங்கே ஒற்றுமை? சப்பாத்திக்கும் சோற்றுக்கும் ஒத்துவருமா? பூரி எங்கே? புழுங்கலரிசி எங்கே? வடநாடு எங்கே? தென்னாடு எங்கே?

★

## முல்லைச் சரம்

நான் மூடமந்திரங்களை வெறுக்கிறேன்.

சடங்கும் தொழுகையும் எனக்கில்லை.

நான் மோட்சம் தேடவில்லை.

குருக்களின் மன்னிப்பு வேண்டாம்.

சர்ச்—பைபிளைவிட என் தலை பெரிது.

என் குரல் கடல் கடக்கிறது.

நாக்கால் ஞாலத்தை அளக்கிறேன்.

நீங்கள் உலகத்தை அளக்கலாம். என் உள்ளத்தை அளக்கமுடியாது

யகோவா, ஏசு, புத்தர் அல்லா, கிரேக்க ரோம எகிப்திய இந்திய தீர்க்க தரிசிகள், கடவுளர் எல்லோரையும் அளந்து படிவமெடுத்து மதிப்பிட்டுள்ளேன். அவர்களுடைய திருவாக்குகளை நான் மறுக்கவில்லை. ஆனால் அற்புதங்களில் எனக்கு நம்பிக்கை இல்லை.

கப்பலிலும் நீராவி யந்திரத்திலும் வேலை செய்யும் பையன்களைப் போலவே நான் பழைய கால ஐதீகக் கடவுளரை மதிக்கிறேன்.

★

நரகம் என்னும் பூச்சாண்டி எனக்கு தூசி!

சுவர்க்கம் என்னும் மாயவலை எனக்கு அணு!

★

"மனிதா! நீ யாருக்கும் தலைவணங்காதே! நிமிர்ந்து நட! கை வீசிச் செல் உலகைக் காதலி! காதலில் கூசாதே! செல்வச்செருக்கரை, கொடுங்கோல் அரக்கரை, மதவெறியரை ஒதுக்கித் தள்ளி உன் மனச்சாட்சியைப் பற்றி நட; எழைகளிடம் இரக்கங் கொள்; தொழிலாளிகளுக்கு ஆறுதலளி!

—வால்ட் விட்மன்

## வேடதாரிகளுக்கு வேதநாயகம்!

*காமுகன் காவி அணிவதும், கள்ளன் கமண்டலமேந்துவதும் போன்ற நிகழ்ச்சிகள் சாதாரணமாகி, துறவுக் கோலம் பஞ்சமாபாதகங்கள் புரிவோருக்குக் கிடைத்த இருப்புக் கவசமாகிவிட்டது. நீசத் தொழில் புரிபவன் பாசத்தை மறந்தவன்போல நடிக்கிறான்; எத்தன் உருத்திராட்சம் உருட்டுகிறான்; சண்டாளச் செயல்கள் சதிராடும் கூடமாக இருப்பவன் சடாமுடியுடன் உலவுகிறான். இந்தப் போலி வேடதாரிகள் புன்மைத் தேரைகளைக் காட்டிலும் கேவலமானவர்கள்; காட்டு விலங்குகளைக் காட்டிலும் மிகவும் ஜாக்ரதையாகக் கையாளப்பட வேண்டியவர்கள் — என்பன போன்ற பகுத்தறிவுக் கொள்கைகள் இன்று மட்டுமல்ல—ஆண்டாண்டு காலமாகவே தமிழகத்தில் நடமாடுகின்றன.*

*அதற்கு உதாரணம்தான் இந்தச் செய்யுள். பழிச்சுமைபோல் சடைவளர்த்து, பண்டார வேடம் பூண்டிருக்கும் 'மேலோரை'ப் பார்த்து, ஏளனம் கொப்பளிக்கும் வார்த்தைகளைச் சேர்த்து, சடை வளர்த்ததின் காரணம் கேட்கிறார் வேதநாயகம் பிள்ளை. அந்தப் பாடல்தான் இது :*

பெண்ணைச் சடையில் வைத்தவன்போல்
பெண்கள் மலரை ஒழிப்பதற்கோ !
பிறர் கண்டாலும் ஆண் பெண் எனும்
பேதந் தெரியா திருப்பதற்கோ ?
பண்ணைப் பழிக்கு மொழியரோடு
பாய்போல் விரித்துப் படுப்பதற்கோ ?
பாசக் கயிறுபோல் பிறரைப்
பற்றி இழுத்துப் பறிப்பதற்கோ ?
மண்ணைத் தழுவ நடக்கு மின்னார்
மலர்க் கால் தூசி தட்டுதற்கோ ?
மாயத் துறவு பூண்டதன்றி
மயிருந் துறவோ மென்றுகோலோ ?
விண்ணைத் தழுவப் பழிச்சுமைபோல்
மிகவே சடையை நீர் வளர்க்கும்
விதமேன் சொல்வீர், பண்டார
வேடம் பூண்ட மேலோரே !

*போலி வேடதாரிகளின் போஷகர்களே! கூர்ந்து கவனியுங்கள்—பாட்டெழுதியவர் பாரதிதாசனல்ல — வேதநாயகம் பிள்ளை !*

# தலையங்கம்

சென்னை 28—1—55 வெள்ளி

## சயனம் — சலசலப்பு!

தலைவர்களுக்கெல்லாம் அமோகமான வரவேற்பு!

மங்கல வாத்தியங்கள், மகர தோரணங்கள், வழியெங்கும்!

கோணத்திற்குக் கோணம் கேமிராக்களின் படப்பிடிப்பு!

இவையெல்லாம் சென்ற கிழமை ஆவடியிலே சிறப்புற நடைபெற்றிருக்கின்றன. 'டைம்ஸ்' பத்திரிகை சுட்டிக் காட்டியிருக்கிறபடி இந்தியாவின் முதல்வராம் நேருவும், அவரது சகாக்களும் "ஹாலிவுட் வளைவு" களைக் கடந்து, பழைய ரோம சாம்ராஜ்யத்து நினைவுகளை பார்ப்போரின் மனதிலே எழுப்பி, பத்து லட்சத்துக்கு மேல் விழுங்கி ஏப்பமிட்டு நிற்கும் சத்யமூர்த்தி நகரிலே பிரசங்க மாரி பொழிந்திருக்கிறார்கள்.

தீப்பொறி பறக்கும் தீர்மானங்கள்—வெறும் வாய்ப்பறையாகி விடாமல் காப்பாற்றுங்கள்—என்று தலைவர்களெல்லாம் கேட்டுக் கொண்டிருக்கின்றனர்.

நாசிக்கிலும், கல்யாணியிலும் காணமுடியாமற் போன உள்ளொளியை ஆவடியில் நடைபெற்ற 'வைர விழா' காங்கிரசிலே கண்டு, கதர்க்குல்லாய் அணிந்தவரெல்லாம் சிந்தை குளிர்ந்தனராம். எனவேதான், 'இது சரித்திர முக்கியத்துவமான காங்கிரஸ்' என்று நாட்டின் நாயகராம் நேரு விளம்பி யிருக்கிறார்.

"அப்படியென்ன சரித்திர முக்கியத்துவம்: நாட்டினர்க்குத் தெரியாத முக்கியத்துவம்?"—என்று சந்தேகக்குரல் கிளம்பலாம். ஆவடியிலே கூடிய வடக்கத்திய சேட்டுகள் எவ்வளவுதான் கவலை கொள்ளாதவர்கள் போல பாசாங்கு காட்டினாலும், மாநாட்டிலே நிறைவேறிய தீர்மானங்கள் அந்தச் 'சரித்திர முக்கியத்துவத்தை' தெள்ளென விளக்கி விட்டது. காங்கிரசின் பிரதான கோட்பாடுகளில் ஏற்பட்டிருக்கும் வெடிப்புகளை — பிளவுகளை—சரிப்படுத்தும் பணிகளோடு, கோட்டைக்குள்ளே நடை பெற்றுவரும் குத்து வெட்டுகளை அமைதிப்படுத்தும் காரியங்களோடு, முக்கியமான ஒருவர் பிரேரேபிக்க, அவரினும் முக்கியமானவர் ஒருவர் ஆமோதிக்க, 'திராவிடநாடு கோரிக்கை, காட்டுக் கூச்சல் என்கிற தீர்மானம் நிறை வேற்றப் பட்டிருக்கிறது.

இதோ, கோவிந்த வல்லப பந்த் வலியுறுத்திய தீர்மானத்தின் வாசகம்:

"பாரத நாட்டின் ஒற்றுமைக்கு குந்தகமாக இருக்கும் பிரிவு உணர்ச்சி எதற்க்கும் இடமளிக்கக் கூடாது...ஒன்றுபட்ட பாரத மென்னும் லட்சிய சித்திக்குத் தடையாக இருக்கும் மாகாணப் பித்தையும் எதிர்க்க வேண்டும்"

—பாரதமாதாவைக் கிழக்கிலும், மேற்கிலும் பலிகொடுத்து விட்டுத்தான் ஐக்கிய பாரதத்தின் அவசியம் பற்றி பந்த் தீர்மானம் நிறைவேற்றி யிருக்கிறார்!

இதை ஆதரித்துப் பேசிய பெரிய மனிதர் அனந்தசயனம் அய்யங்காரோ இன்னும் தீவிரமான மொழியிலே, மாவீரர் அணிவகுப்பாம் நம் படைவரிசையின் போர்க்குரலை—அதிலே புகுந்திருக்கும் இலட்சிய கீதத்தை ஒரே வார்த்தையின் உதவி கொண்டு தாக்கி யிருக்கிறார்—'திராவிடஸ்தான் கோரிக்கை காட்டுக் கூச்சல்' என்று!

நாட்டு விடுதலை கோருவது காட்டுக் கூச்சலாம்-1947-ம்ஆண்டு ஆகஸ்ட்-15க்கு முன்னர் 'அவர்கள்' எழுப்பியது என்ன கூச்சல் என்பதை நினைவுகூறத் தவறியவர்கள் இப்போது, நம்மைத் திட்டுகிறார்கள்!

பட்டாணிஸ்தான் வேண்டுமென்று கர்ஜனை புரியும் கபர்கானை ஆதரித்தவர்கள்—கயானாவில் உரிமைக் கொடி பறக்க விட்டிருக்கும் செட்டி ஜெகனுக்கு வாழ்த்துக் கூறுபவர்கள் தென்னகத்துப் பிரிவினையை மட்டும் ஏன் எதிர்க்க வேண்டும்?

அப்படியானால் நம்முடைய பிரச்சினையை அவர்கள் [illegible] நன்றாகப் புரிந்து கொள்ள வில்லையா?—இப்படி முடிவு கட்டுவ[illegible] யென்று தெரியவில்லை.

ஆவடிக் காங்கிரசில் வரவேற்புக் குழுத் தலைவியாம் [illegible]மாள் பொருளாதாரத் துறையில் தெற்கு எப்படியெல்லாம் புறக்கணிக்கப் படுகிற தென்று விளக்கமுற எடுத்துரைத்திருக்கிறார்.

"பெரிய பெரிய தொழிற்சாலைகளும், வேலைத் திட்டங்களும் உருவாக்கப் படுவதில், இந்த மாநிலத்திற்கு உரிய பங்கு கிடைக்க வில்லையே என்ற ஓர் அபிப்பிராயம், எங்களுக்கிடையே நிலவி வருகிறது; தேசியத் திட்டங்களில் இடம்பெறுகின்ற பெரிய தொழிற்சாலைகள், விஞ்ஞான ஆராய்ச்சி நிலையங்கள் முதலியன அதிக அளவில் தென்னாட்டிலும் இடம் பெற வேண்டுமென்பது [illegible] பேரவா; இதைத் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும் [illegible] நான் கேட்டுக் கொள்கிறேன்"—என்று அமைந்த அவரது [illegible] ஆவடியிலே குழுமியிருந்தோர்க்கு நிச்சயம் தென் புலத்தோ[illegible]கத்தை எடுத்துக் காட்டியிருக்கும்.

அனந்த சயனம் அய்யங்காரும் நம்மிடையே அதிகம் பழக்கமானவர் தான்! 'வட நாட்டின் மீது தென்னாட்டாருக்கு வெறுப்பு வளர்ந்து விட்டதே — எப்படியாவது தலைநகரத்தை சில நாட்களுக்காவது பெங்களூருக்கோ, ஐதராபாத்துக்கோ மாற்றுங்களேன், என்று டில்லி பாராளுமன்றத்திலே அவர் அங்கலாய்த்துக் கொண்டதிலிருந்தே அவரும் நமதியக்கத்தின் போக்கினை உணர்ந்த[illegible] தெரிகிறது. அப்படி உணர்ந்துங்கூட, பந்த்தோடு கூட்டுச் [illegible] அனந்தசயனம் சலசலப்பு செய்வதின் நோக்கமென்ன?

மின்னுகின்ற வடக்கத்தியர் வாழ்வு நாம் பிரிந்தால் மங்கி மண்ணாகிவிடும் என்ற கலக்கமா?

நாம் எழுச்சி பெற்றால் அவர்களது சுரண்டல் இயந்திரம் சுக்கு நூறாக உடைந்துவிடும்—உடைந்துதான் ஆகவேண்டும்—ஆகியே தீரும் என்ற அச்சமா?

'வீடுதலை உணர்ச்சி ஒடுக்கினால் ஓங்கும்; அடக்கினால் ஆணி வேர்விட்டுத் தழைக்கும்'-என்கிற உண்மை தெரிந்துங்கூட, பின்னர் ஏன் அவர்கள் நம்மைப் புரிந்து கொள்ளாதவர்கள் போல நடிக்கிறார்கள்?

ஏக இந்தியா என்கிறார் நேரு; காட்டுக் கூச்சல் என்கிறார் அய்யங்கார்—தீர்மானமும் நிறைவேற்றி விட்டதாக பெருமிதமடைகிறார்கள்.

காங்கிரசின் ஒவ்வொரு தீர்மானமும் அப்படியே நிறைவேற்றப் பட்டு விடுவது போலல்லவா குதிக்கிறார்கள் தேசியத் திருவாளர்கள்! காரச்சியிலே, லாகூரிலே கூடி, இந்தியாவை மொழிவழி மாநிலங்களாகப் பிரிப்பதே காங்கிரசின் லட்சியம்; என்று நிறைவேற்றப் பட்டதீர்மானம் என்னவாயிற்று?—அந்தத் தீர்மானத்திற்கு கல்யாணியிலே நெய்ப் பந்தம் கொளுத்தி, ஆஜ்மீரிலே கொள்ளி வைத்தது தெரியாமலா போய்விட்டது!

நேரமொன்று வரும்; அப்போது, "காங்கிரஸ் இனிமேல் தென்னாட்டில் கூடாது. தென்னாடு தனித்து இயங்க காங்கிரஸ் இணங்கி விட்டது" என ஒரு தீர்மானம் நிறைவேறலாம்! ஒரு வேளை கோவிந்த வல்லப பந்த்தே அந்தத் தீர்மானத்தை பிரேரேபிப்பவராகவும், அய்யங்காரே ஆமோதிப்பவராகவும் இருக்கலாம்!

நம்முடைய உரிமைப் போர்கண்டு சலசலக்கும் அய்யங்கார் நிச்சயம் இதுபோன்ற காட்சியொன்றை நினைவில் வைத்தே தீர வேண்டும்-என்பதை நம்மால் சொல்லிக் கொள்ளாமலிருக்க முடியவில்லை!

## ஆசிரியர் மு. க. உடல்நிலை.

கடந்த பதினைந்து தினங்களுக்கு மேலாக, எழும்பூர் கண் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுவந்த மு. க. அவர்கள் 26-ந் தேதி புதன் கிழமையன்று கோபாலபுரம் வீட்டிற்கு அழைத்து வரப்பட்டார். இன்னும் சிறிது நாட்களுக்கு 'அவுட்—பேஷண்டாக' இருந்து சிகிச்சை பெற வேண்டுமென்றும், நல்ல ஓய்வு தேவையென்றும் டாக்டர் சொல்லி யிருக்கிறார். நரம்புகளுக்கு அதிகம் வேலை தரக் கூடாதாகையால், நண்பர்களுடன் பேசுவதற்குக் கூட டாக்டரால் தடை செய்யப் பட்டிருக்கிறது. அன்பர்கள் அவர்களும் வந்து பார்த்து பூரண ஓய்வு எடுத்துக் கொள்ளும்படி சொல்லியிருக்கிறார்கள்.

One side of the page is dark

# அரசியல் கும்பமேளா!

## ஆவடியிலே 'நாடிதளர்ந்தோரின்' அணிவகுப்பு!

★ இங்கிலாந்திலே கன்சர்வேட்டிவ் கட்சி மாநாடு கூட்டினுல் அதற்காக அன்றைய தினம் அரசாங்க அலுவலகங்களுக்கெல்லாம் விடுமுறை அளிக்க மாட்டார்கள்!

★ ஆப்ரகாம் லிங்கன் மறைந்த நாளும், கிறிஸ்து பிறந்த நாளும் போன்ற சில முக்கிய தினங்கள்தான் அமெரிக்காவிலே அரசாங்க விடுமுறை நாட்கள்!

★ நியூயார்க்கிலே ரிபப்ளிகன் கட்சியினர் கூடினுலும், சிகாகோவில் டெமாக்கிரட்டிக் கட்சியினர் ஒன்றுசேர்ந்து மாநாடு கூட்டினுலும், அங்கே அரசாங்க அலுவல்கள் தடையின்றி நடைபெறும்!

★ செங்கோல் பிடிக்கும் கட்சி கூடிப் பேசி திட்டங்கள் நிறைவேற்றினுல் அன்று ஆஸ்திரேலியாவிற்கு பொது விடுமுறை ஏதும் கிடையாது!

★ ஆனுல் இந்தக் கேடுகெட்ட நாட்டிலேதான் கேள்விப்படுகிறோம்; ஆளும் கட்சியினரின் மாநாட்டு தினத்தன்று அரசாங்க விடுமுறை அளிக்கப்பட்டிருக்கிறது!

ஆமாம் நண்பர்களே! இந்த உபகண்டத்து அரசியல் மூக்கணுங்கயிற்றைக் கையிலேந்தியிருக்கும் 'சர்வாதிகாரக் குஞ்சுகள்' சென்ற கிழமை ஆவடியிலே கூடினுர்களல்லவா! அந்த மாநாடு நடந்த தேதியான ஜனவரி 21-ஐ சென்னை அரசாங்கம் விடுமுறை நாளாகப் பிரகடனப் படுத்தியுள்ளது!

இருண்டு கிடக்கும் தமிழகத்தின் இலட்சியத் திங்கள்-எழுத்தாணியின் துணைகொண்டு ஆரியத்தின் துடுக்கடக்கிய ஏந்தல்-தெளிவற்ற நெஞ்சங்களுக்கு தெளிவு சேர்த்த வேந்தன்—திருவள்ளுவப் பெருந்தகையின் பிறந்தநாளன்று விடுமுறை வழ்ங்க மறுத்த இந்த 'வண்கஞர்' அரசாங்கம், அரசியல் கட்சியொன்றின் ஆண்டு விழாவிற்கு அரசாங்க அலுவல்களையே நிறுத்தி வைத்திருக்கிறது.

ஜனநாயக நாட்டில் விசலாமா இந்த சர்வாதிகார வாடை?

ஆவடியில் நடந்தது அரசியல் கட்சியின் மாநாடா; அல்லது இந்திய அரசாங்கத்தின் மாநாடா என்று பேதந் தெரியாத அளவிற்கு அதிலே அரசாங்கம் பங்கு பெறலாமா?

இந்த நாட்டு அரசாங்கமென்ன, கதராடை அணிந்தோரின் பரம்பரைச் சொத்தா; இச்சைப்படி சலுகை தந்து, இஷ்டப்படி உரிமை கொடுக்க?

விடுமுறை தந்தது மட்டுமல்ல; இன்னும் வேதனை தரும் நிகழ்ச்சிகளிலும் பங்கு பெற்றிருக்கிறது, இந்த மானிலத்து அரசாங்கம்!

ஆவடியிலே மாநாடு நடைபெற்ற மைதானத்துக்கென ஆறடி நீளமும், மூன்றடி அகலமும் உள்ள சுமார் ரூ. 10 மதிப்புள்ள ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் துத்தநாகத் தகடுகளை குறைந்த விலைக்கு வரவேற்புக் கமிட்டியின் செயலாளராம் கோயங்காவிற்கு விற்றிருக்கிறது.

சமார் ஏழரைமைல் நீளமுள்ள தார் ரோடு ஒன்றை ரூபாய் 7-லட்சம் செலவில் இந்த மாநாட்டிற்கென்றே சர்க்கார் அமைத்துக் கொடுத்திருக்கிறது.

சுமார் ஆயிரம் ஏக்கர் பரப்புள்ள இந்திய ராணுவ முகாமான ஆவடி மைதானத்தை வாடகை வாங்கிக்கொள்ளாமலேயே வரவேற்புக் கமிட்டியாரின் கையில் ஒப்புவித்திருக்கிறதென்றும் சொல்லிக் கொள்கிருர்கள்.

அது மட்டுமா? மாநாட்டுப் பந்தலுக்கருகிலே பிரயாணிகள் இறங்கி வரவேண்டுமென்பதற்காக ஒரு மைல் நீளத்திற்கு விசேஷ இருப்புப்பாதை போடப்பட்டிருக்கிறது. அந்த புதிய பாதை எந்த ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்ந்ததென்று நமக்குத் தெரியவில்லை.


சொந்தக்கட்சியை வளப்படுத்திக்கொள்வதற்கென்றே பொதுச்சொத்தைப் பயன்படுத்திக் கொண்ட இந்தப் பொல்லாதவர்கள்தான் நானிலம் வியக்கும் சோஷலிச சாம்ராஜ்யத்தை இந்த மண்ணிலே நிலைநாட்டப் போகிருர்களாம்!

இவர்கள் பின்பற்றுகிற கொள்கைதான் வையகத்தை வாழ்விக்கப்போகும் காந்திய மார்க்கமாம்!

இந்த 'சோட்டா சோஷலிஸ்டுகளின்' மாநாட்டிற்குத்தான் மூன்று நான்கு ரூபாய் டிக்கெட்டிற்கு மதுரையிலிருந்தும் ராமநாதபுரத்திலிருந்தும் தென்னுட்டு பணமுதலைகளின் ஸ்பெஷல் பஸ்கள் விடப்பட்டிருக்கின்றன!

அரசாங்கக் கருவிகள் கைகொடுக்க, செல்வச்சீமான்கள் ஆசிர்வதிக்க-வெளிநாட்டுப் பிரபுக்கள் ஆலவட்டம் சுழற்ற-இப்படி பற்பல வசதிகளை வைத்துக்கொண்டு நாலு லட்சம்பேரைத் திரட்டி விட்டார்களாம்; பெருமை பேசுகிருர்கள்!

இதே வசதிகளும், அரசாங்க உதவிகளும் கிடைத்தால் ஆவடியிலே ஒரு கழைக்கூத்தாடிகூட நான்கு லட்சம்பேரைச் சேர்த்து விடுவான்.



"என்ன தம்பி! நேரு பேச்சை கேக்காம எங்கேயோ பாத்துக் கிட்டிருக்கியே! என்ன தம்பி தேடறே?"

"ஒண்ணுமில்லே அண்ணே! என்னமோ அஞ்சு நிமிஷத்துலே ஆயிரத்தைனூறு இட்லி சுடுதாம்ல ஒரு மிசினு — அது எங்கே இருக்குன்னு தேடறேன்!"

### பஞ்சப் பிரதேசத்தில் பண்டிதர்!

நேரு பொருளாதாரத் தீர்மானத்தைப் பிரேரித்துப் பேசுகையில் 'தேசிய மயமாக்குதல்' என்ற சொல்லுக்கு தக்க இந்தி வார்த்தை அகப்படாமல் திண்றிப் போனுராம். சிலர் 'ராஷ்டிரீய கான்' என்று கோஷித்தார்களாம்! ஆனுல் இந்தச் சொல் பொருந்திவரவில்லை என்ருராம், நேரு!

எனவே, ஆங்கிலப் பதத்தை உபயோகித்தவறே நேரு தமது பேச்சை தொடர்ந்தாராம்.

இப்படி சொல் வளமும், பொருள் வளமும் இல்லாத இந்தி மொழிதான் இந்தியாவின் பொது மொழியாகப் போகிறது! இந்த 'லம்பாடி'க்கு வரவேற்புக் கூறும் இந்நாட்டுத் தோழர்களே! இடுப்பொடிந்த கோழைகளே! பஞ்சப் பிரதேசத்தில் நேருவை இறக்கிவிட்ட கதிதனை நினைத்தாவது புத்தி பெறுங்கள்.

# தூக்கிலே தொங்க வேண்டியோர்-தோளிலே தொத்துவதேன்?

வாளை நெல் வயலில் வாளை மீன்கள் பாய்ந்து, பக்கத்திலிருக்கும் பாக்கு மரத்தின் பாளையை முறித்தெறியுமாம்— இவ்வாறெல்லாம் ஒரு நாட்டின் நீர்வளத்தை விவரிக்கும் பாவாணர்கள் உயர்வு நவிர்ச்சி தோன்ற கவிதை புனைவார்கள். வாளை மீன்கள் துள்ளி விளையாடும் வாவிகள் எங்கே— பாக்கு மரங்கள் பின்னிக் கொண்டிருக்கும் அணிமலர்ச் சோலைகள் எங்கே — என்பன போன்ற கேள்விகளை எழுப்பாது நாமெல்லாம் கவிதை நயத்திலே லயித்திருப்போம். ஆனால் அரசியற் துறையிலே, பொறுப்புணர்ந்த கட்சியைச் சேர்ந்தவர்கள் பொது மக்களை ஏமாற்றுவதற்கென்றே தயாரித்திடும் வெத்து வேட்டுகளை எந்த நாடும் அனுமதித்துக் கொண்டிருந்தது கிடையாது.

ஆட்சிபீடத்தின் ஏக வாரிசாய் இன்று ஆவடியிலே--பத்து லட்சத்துக்கும் மேலாக செலவிடப்பட்ட பந்தலிலே-வாய்ப்பறையடித்த காங்கிரஸ் கட்சி ஒரு காலத்தில் இந்த நாட்டு விடுதலை அணிவகுப்பின் தளகர்த்தனாக இருந்தது. பொருளாதாரப் பேரேடுகளைப் புரட்டி—சட்டப் புத்தகங்களை எடுத்து நீட்டி-வெள்ளையன் செய்த கொள்ளைகளை நாடெங்கும் எடுத்துக் காட்டியது— 'இப்படியெல்லாம் நம்முடைய இரத்தத்தை உறிஞ்சிடும் அட்டைகளை நாம் ஏன் அடித்துத் துரத்தக்கூடாது' என்று இடிமுழக்கம் செய்தது.

அது மட்டுமா? 'நாளை எங்கள் கட்சிப் பட்டத்துக்கு வந்தால் புவியிசை ஈடிணை இல்லாத ராமராஜ்யத்தை சிருஷ்டிக்கப் போகிறோம் — தெருவெல்லாம் தேனும் பாலும் பெருகி ஓடும்-அதிலே நீங்கள் பலாச்சுளையை துவைத்து நிலாச்சோறு சாப்பிடலாம்' — என்று உரத்த தொனியில் கொக்கரித்தது.

பரிசில் பெறுவதற்காக, கஞ்சனை கர்ணனென்றும், கல்நெஞ்சனை காமதேனுவென்றும் ஏற்றித் துதிக்கும் புலவனின் சொற்களா இவைகள்—என்று கேள்விக்குறி போட்டார்கள் சிலர்.

"நடக்குமா இப்படி!" என்று மூக்கிலே விரலை வைத்தார்கள், பலர். அப்போதாவது இந்த நம்பிக்கையை மாற்ற நினைத்தார்களா, இந்த தேசியத் தோழர்கள்? இல்லையே! கேட்போரின் நாக்கிலே நீர் ஒழுகி, பக்கத்திலிருப்போரின் முகத்திலே தெறிக்கும் அளவுக்கு— எதிர்காலத்தில் தாங்கள் சாதிக்கப் போவதைப்பற்றி இனிய உரை நிகழ்த்தினார்கள். சர்க்கரைப் பந்தலிலே தேன் மாரி பொழிவித்த அவர்களது திட்டங்கள் போலி புஸ்வாணங்கள் என்பதறியாதார் உயிரைப் பணயம் வைத்து அன்னிய அரசினை வீழ்த்த போர்க்களம் புகுந்தனர். டயர்களின் துப்பாக்கிக் குண்டுகள் மார்பினைத் துளைத்தபோதும், வெலிங்டனின் போலீசார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வெடித்த போதும், மூவணக்கொடியின் கீழே நின்று கொண்டு, வர்ண ஜாலப் பூங்கொத்துகளைப் போல நாளை எழும்பப்போகும் சுதந்தர சாம்ராஜ்யத்தை-தேசியத்தார்கள் தீட்டிக்காட்டினார்களே, அந்தக் காட்சிதான்—அவர்களது நினைவுத் திரையிலே தோன்றி மறைந்தது.

அந்த நேரத்திலேதான் மோதிலால் மைந்தர், ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்திலே பெற்ற புதிய பட்டத்துடன், தேம்ஸ் நதிக் கரையின் தென்றலை நுகர்ந்து, அதிலே மலர்ந்த புதுப்புது எண்ணங்களைச் சுமந்தவராய் தேசியக் கூடாரத்துள் நுழைந்தார். அப்போது அவர் நிகழ்த்திய குருவளிச் சொற்பொழிவுகளை இந்த நாட்டார் நிச்சயம் மறந்திருக்க முடியாது. கைராட்டைக் கொடிபிடிட்போர் நாளை செங்கோல் பிடித்தால், நாட்டிலே அமுலாக்கப்படும் திட்டங்கள்; நிறைவேற்றப்படும் சட்டங்கள்—இவைகள் பற்றியெல்லாம் கவினெழுகும் நடையிலே எடுத்துக்காட்டியவர், அவர் தான்! போர்க் காலங்களிலே கள்ளமார்க்கெட்வியாபாரிகளை நசுக்கி எறிய வேண்டியதின் அவசியம் பற்றிய அவரது கருத்துக்கள் எல்லோருக்கும் நினைவிருக்கும். புதுமை விரும்பும் வாலிப உள்ளங்கள் நெஞ்சில் நிறுத்திக் கொள்ள வேண்டிய பொன்மொழிகளாயிற்றே அவைகள்!

கருப்பு மார்க்கெட்காரர்கள் சமுதாயத் துரோகிகள். சுதந்திர இந்தியா அவர்களை தூக்கிலேற்ற வேண்டும் —இதுபோலப் பேசினார். பத்திரிகைகள் எல்லாம் 'பார்டர்' கட்டி இந்தச் செய்தியைப் பிரசுரித்தன.

நாமும் சுதந்தரம் பெற்றோம், ஆண்டுகள் ஒன்றா? இரண்டா? ஏழு ஆண்டுகளையும் எட்டிவிட்டோம். இன்று நாம் காணும் காட்சிகள்தான் என்ன? கருப்புச் சந்தையிலே வியாபாரம் செய்து, வெள்ளிப் பணம் குவித்தவர்கள் வெள்ளைக் குல்லாய் அணிந்து கொண்டு ஆவடியிலே சுற்றுகிறார்கள்.

"அதோ தெரிகிறதே, ஏழடுக்கு மாளிகை; அதன் சொந்தக்காரன் யார் தெரியுமா? சண்டைக் காலத்தில் கள்ள மார்க்கெட்டிலே சம்பாதித்த பணம்தான், அது! அந்த மாளிகையின் உச்சியில் பறக்கிறதே, மூவர்ணக் கொடி; அது ஏன் தெரியுமா? எல்லாம் அந்தப் பாவக் கறையை மறைப்பதற்குத்தான்!" — என்பன போன்ற உரையாடல்களை நாம் அன்றாடம் கேட்கிறோம்.

அன்று மோதிலால் மைந்தர் பேசிய பேச்சு என்னவாயிற்று? எல்லாம் வெறும் வாய்வீச்சு தான்!

இதோ, இந்தப் படத்தைப் பாருங்கள், கேன்யாவிலே ஒரு வியாபாரி அரசாங்கம் குறிப்பிட்டிருந்த விலைக்கு அதிகமாக ரொட்டிகளை விற்றுவிட்டான். கள்ள மார்க்கெட்டிலே பொருளீட்டிய அந்த வர்த்தகன் நேருவின் ஆட்சியிலே இருந்திருந்தால் ஒரு காங்கிரஸ் எம்.எல்.ஏ. வாக அல்லது பார்லிமெண்ட் உறுப்பினராக உலவிக் கொண்டிருப்பான்.

ஆனால், அங்கு நடந்ததென்ன?

அந்த கருப்பு மார்க்கெட் வியாபாரி தெரு முனையிலே நிறுத்திவைக்கப்பட்டு, அவனுக்கு சவுக்கடிகள் தரப்படுகின்றன. தண்டனைக்குப்பிறகு அவன் டாக்டரால் சோதனை செய்யப்பட்டு இனி இந்த துரோக வேலையில் ஈடுபடாதவாறு உபதேசிக்கப் படுகின்றான்.

தொடர்ச்சி 10-ம் பக்கம்

## இங்கல்ல; கேன்யாவில்!









# தளிர்

அரும்பு பொதியவிழா மல்லிகையைப் பார்த்தால்—ஆகா—எத்தனை இன்பமாயிருக்கிறது. வயலிலே நாற்று! வண்ணப் பொய்கையிலே மீன் குஞ்சு! காட்டிலே மான்குட்டி—வீட்டிலே குழந்தை! குழந்தாய்! ஈறுகாட்டி இளஞ்சிரிப்பு காட்டும் இன்பப் புதையல்! ஜீவ ஆறு காட்டும் எழில்! தூண்டாவிளக்கு! மூன்றாம்பிறை! செல்வத்துட் செல்வம்! செழும்பொன்! செந்தேன்! சங்கத் தமிழ்!

உதைத்த காலுக்கு முத்தமும், உமிழ்ந்த வாய்க்கு சர்க்கரையும் உன்னைத்தவிர வேறு யாரால் பெறமுடியும்? சிரிப்பாய், அதன் விலை ஜெகம் பெறும். அழுவாய் — அதையடக்க கவிஞர்களின் எழுத்தாணி முனைகள் அள்ளிக் கொட்டியிருக்கும் காவியங்கள்—அப்பப்பா—உயிர் ஓவியங்கள்.

அண்ணன். தம்பி, அப்பா, அம்மா, ஆளன் அனைவரையும் வெறுத்து ஆயுளை முடித்துக் கொள்ள விரும்பிய எத்தனையோ பெண்மணிகளை, மடியிலிருந்து பார்த்தும், கருவிலிருந்து பேசியும், சாவிலிருந்து மீட்டிருக்கிறாய் நீ!

**குழலையும் யாழையும் வெல்லுவாய் என்ற குறளையும் வெல்லும் உனது மழலை மொழி.**

தென்றலிலே உன் அசைவைக்காண்பதோ உன் அசைவிலே தென்றலைக் காண்பதோ என்று கவிபுனைவோர் தத்தளிப்பது எனக்குத் தெரிகிறது!

கொட்டும் வறுமை — குட்டும் அதிகாரம் — இவைகளால் கெட்டுப்போன குடும்பங்கள் கூட உன் பட்டுப்போன்ற பாதங்களைத் தொட்டு பரவசமடைவதை நான் கண்டதுண்டு.

இளங் குளிரே!
எழுங் கதிரே!
வளர் தளிரே!

நல்ல மனதிற்கு குழந்தை மனத்தைத்தான் ஒப்பிடுகிறார்கள். உன் மனம் உயர்வானது. மாசற்றது. அது மாணிக்கத்தின் ஜோதி. பேதங்களில்லை — பிரிவுகளில்லை — பிளவுகளில்லை — வளைவுகளில்லை—பாசி இல்லை—பயமுமில்லை. அதோடு ஒன்று குழந்தாய்!

உனக்குக் கடவுள் என்ற எண்ணமுமில்லை. நீயும் நாத்தீகவாதி. நல்ல மனதிற்கு குழந்தை மனம் என்று பெயர். ஆகையால் நாத்தீகர் நல்ல மனம் படைத்தவர்.

**நல்ல மனம் படைத்தவர் நாத்தீகர்.**

"அல்ல, அல்ல! நல்லது கெட்டது தெரியாக் குழந்தை — அறிவு தெளியாப் பருவம்—அரவத்தோடு விளையாடும் காலம்—ஆசையால் ஆண்டவன் சிந்தனை கிடையாது. வளர்ந்த மனிதன், நல்லது கெட்டது புரிந்தவன். பாம்பை நஞ்செ‌ன அறிந்தவன். அவன் சிந்தனைக்குக் கடவுள் தெரிகிறார்"

என்று வாதிடுவோரை நானறிவேன் கண்ணே!

நீ நாகத்தோடு விளையாடுவது போலத்தான் பெரியவர்கள் நாசத்தோடு விளையாடுகிறார்கள் — அவர்கள் ஆண்டவனை வணங்குகிறார்கள். வாழ்த்துகிறார்கள். ஏத்திப் பாடுகிறார்கள்! அவர்கள் அறிவு தெளிந்தவர்கள் என்று அர்த்தம்! பாம்பொடு விளையாடும் பண்பில் நீயும் அவர்களும் ஒன்றுதானே குழந்தாய்!

பாம்பு—"பாபம்"
பாம்பு—பாலப் பருவத்தில்!
'பாபம்'—வளர்ந்த மனிதனுக்கு!

அவர்களுக்கு மாத்திரம் ஆண்டவன் எப்படி வந்து குதித்தான்?

காரணம் கண்டுபிடித்து விட்டேன், என் கட்டாணி முத்தே!

நீ—நல்ல மனம் படைத்த தளிர். பெரியவர்—நல்ல மனம் படைத்த இலை.


நீ விளையாடுவது பாம்போடு! அவர் விளையாடுவது "பாபச்" செயலோடு!

ஆனால்

நீ யாரையும் கெடுப்பதில்லை—அதனால்தான் உனக்குக் கடவுள் அவசியமில்லை.

## கருணாநிதி

# தங்கப் பேழை



ஞ்சலமே உருக் கொண்டு முகமது காசிம் கூடாரத்துள்ளே அலைந்து கொண்டிருந்தான். சீறிவரும் புயல் போல அவன் முன்னே சிந்துநதி பாய்ந்து கொண்டிருந்தது. பொழுது விடியுமுன்னர் காசிமின் படைகள் நதியைக் கடந்து, அக்கரையிலே அணிவகுத்து நிற்கும் தரகனின் படை மீது மோத வேண்டும்.


நதியிலே முழக்கமிட்டு ஓடும் புது வெள்ளமோ படைவீரர்களால் நீந்திக் கடக்கக்கூடிய அளவில் இல்லை. காசிமின் சைன்யமோ ஒட்டகத்தையும், பாலைவனத்தையுமே பார்த்து பழக்கப்பட்ட அராபிய வீரர்களைக் கொண்டது. அலைகடலைத் தவிர வேறெந்த தண்ணீர்த் தேக்கத்தையும் பார்த்தறியாத வீரர்கள், சுழலும், சுருவும் கொண்ட சிந்து நதியை எவ்வாறு கடக்கமுடியும்? ஹுக்காவின் புகைச் சுருள் அவனது நாசியைச் சூடேற்ற, காசிம் ஒருமுறை கைகளைப் பிசைந்து கொண்டான்.

"படைத் தலைவா! கலக்கம் வேண்டாம். நம் காரியம் கைகூட புல்லுருவி ஒன்றை பிடித்து வந்திருக்கிறேன்."—

வீரனொருவன் வணங்கியபடியே இந்த சேதியைச் சொன்னான்.

"என்ன சொல்கிறாய், யாஸ்மின்? புரியும்படிச் சொல்."

"விடியுமுன்னர் நமது படைகள் ஆற்றைக் கடக்க ஏற்பாடு செய்துவிட்டேன், பிரபூ. நமது வைரியின் கூட்டத்திலிருந்தே ஒரு குள்ளநரியை விலைக்கு வாங்கிவிட்டேன். விடிவெள்ளி கிளம்புமுன்னர் நமது கூடாரத்தருகிலே ஆயிரம் படகுகள் அணிவகுத்து நிற்கும்."



"என்ன சொன்னாய்? சிந்து பூமி சுத்த வீரர்களின் உறைவிடமென்றல்லவா நினைத்திருந்தேன்; இங்கு காட்டிக்கொடுத்து உயிர் பிழைக்கும் சோம்பேறிகள் கூடவா இருக்கிறார்கள்?"

"ஆமாம், தலைவரே! பரசுராமன் தவம் புரிந்த தலமல்லவா, இந்த சிந்து நாடு! துரியோதனின் மருமகனும் ஜயத்திரதன் ஆண்ட பூமியும் இதுதானே! அந்த இனத்திலே நமக்கேற்ற வெளவால்களுக்கா பஞ்சம்?

"உன்னைத் தளகர்த்தனாக்குகிறேன்; படகுகள் தர ஏற்பாடு செய்" — என்றேன். அவனே முடியாதென்று தலையசைத்துவிட்டான்.

"பொன் மூட்டைகள் பலவற்றை நீட்டினேன் — போதாதென்று புன்சிரிப்பு காட்டினான்.

"நவரத்தின மணிகளை அவன் முன்னே வாரியிறைத்தேன்—நாக்கிலே நீர் சொட்ட என்னை வாரியணைத்துக்கொண்டான். மோகவசியன் என்பதுதான் அந்தத் துரோகப் பிண்டத்தின் பெயர்"

"சபாஷ், யாஸ்மின்! உதய சூரியனோடு நாமும் எழுந்து, தரகனுடைய படைகளின் விலாப்புறத்திலே பாயவேண்டும். அதற்கு நம் காலாட்படைகளைத் தயார் செய்துவிடு."

காசிமின் முகம் தாமரையை உவமைக்கு அழைத்தது. அவ்வளவு மகிழ்ச்சிக்கு ஆளாகிவிட்டான், அவன்!

ஒரு முறை கூடாரத்தின் மூலையை அழகு செய்த தங்கப் பேழையைக் கடைக் கண்ணால் பார்த்துக்கொண்டான். ஒரு ஆள் உயரமுள்ள அந்தப் பேழையை, வைரமணிகளால் நிறப்பிப் போருக்குப் புறப்படும்போது சக்கரவர்த்தி சன்மானமாக அளித்த காட்சி அவனது நினைவிற்கு வந்தது.

நாளை அரேபியாவிற்குள் அடியெடுத்து வைத்ததும் துடியிடை மாதர் பூவிதழ்கள் தூவி அவனை வரவேற்பர்; தெருவெல்லாம் மக்கள் கூட்டம் திரண்டிருக்கும்; அவனைப் பார்ப்பதற்கு! 'சிந்து நாட்டை வென்று என் சிந்தை குளிப்பாட்டிய வீரனே!' என்று சக்கரவர்த்தி அவனை மார்புறத் தழுவிக்கொள்வார். சபாமண்டபம் அவனுக்கு விருதுகள் சூட்டி மரியாதை செய்யும்.

—இப்படியெல்லாம் இன்பக் கனவுகள் கண்டுகொண்டே காசிம் கண்ணயர்ந்தான்.

* * *

பொழுது புலர்ந்தது. கதிரவன் கார்மேகங்களுக்கு பொன்மெருகு தந்து கொண்டிருந்தான். சிந்து நதி சிகப்பு நீரைத் தாங்கிய வண்ணம் ஓடிக்கொண்டிருந்தது.

காசிமின் மின்னல் வேகத் தாக்குதலை தரகனின் படைகளால் தாங்க முடியவில்லை. மோகவசியன் காசிமுக்குப் பக்கத்திலே நின்று சூழ்ச்சியால் பகைப் படையை ஊடுருவும் விதங்களைச் சொல்லிக் கொண்டிருந்தான். அக்கினிமுக பாணமொன்று தரகன் வீற்றிருந்த யானை மீது விசப்பட்டது. அவ்வளவுதான்! யானை மீதிருந்த அம்பாரி ஜ்வாலைவிட்டு எரியத் தொடங்கிற்று தீயின் வேகம் தாங்க முடியாத குஞ்சரம் சிந்து நதியிலே குதித்துவிட்டது. தரகனை இழந்த படைவீரர், போர் முறை போதித்த தலைவனை இழந்த காரணத்தால் புறமுதுகு காட்டி ஓடினர், வெற்றி முழக்கம் விண்ணளாவ பிராமண பதத்தை தீக்கிறையாக்கி தலைநகருள்ளே பிரவேசித்தான், காசிம்!

தரக வேந்தனது தேவியின் அந்தப்புரம் நிலா அழிந்த நீலவானமாக, சோபை இழந்து நின்றது. வேந்தனின் மகள் சூர்யா அம்பு தைத்த மானைப் போல வாடிப் போயிருந்தாள். அந்த சமயம் ஒடி வந்தாள் ஒரு சேடிப் பெண். "தீ வளர்த்து விட்டோம், தேவி! காசிம் வருவதற்கு முன் நாம் கைலாசம் போய்விட வேண்டும்!" என்றாள்.

சூர்யாவின் மனம் நிலை கொள்ளவில்லை. யோசித்து, யோசித்து அவள் இப்போது ஒரு தீர்க்கமான முடிவிற்கு வந்திருந்தாள்.

"தீயை அணைத்து விடுங்கள். எங்கே எனது அணிகலன்கள்?—ஒரு நொடிக்குள் என்னை இந்திராணியைப் போல ஜோடனை செய்யுங்கள்"- என்று கர்ஜனை புரிந்தாள்.

இந்தத் திடீர் யோசனை கேட்டு தோழியர் திகைத்தபோதிலும், ஓடி ஆடி இளவரசியை ஜோடனை செய்வதில் முனைந்தனர்.

"என் மேனியின் மினுமினுப்பிலே அந்த முகமதியன் சொக்கிவிட வேண்டும்," என்று சொல்லியபடியே முத்துவடத்தை கழுத்திலே அணிந்து கொண்டாள். புனுகும், புதுமலரும் அந்தப் புரத்தை கந்தர்வபுரியாக்கியது. எல்லாம் மின்னல் வேகத்தில் நடந்தேறின.

நேரம் ஓடியது. கடைசியில் வெற்றிவீரனாக, முரசுகள் முழங்க சங்குகள் ஒலிக்க, அரண்மனைக்குள் நுழைந்தான், காசிம்! அவன் பாதத்துக்கு பன்னீர் தெளித்து சூர்யா அவனை வரவேற்றாள்.

தந்தையின் சாவு குறித்து அவள் நெஞ்சுருகிப்போகவில்லை. சாகசப் பேச்சால், கடைக் கண் வீச்சால், அப்பா ஆண்ட தரணியை மீட்டுவிடலாமென்ற நினைப்பு மேலிடும்போது அவள் ஏன் கலங்க வேண்டும்? கண்ணீர் சிந்த வேண்டும்?

"இளவரசியாரே! தீக்குளித்து இந்த திரேகத்தை மண்ணாக்கி விடப்பார்த்தீர்களே, நல்ல சமயத்தில் நான் வந்தேன்"

"ஆமாம்; இல்லாவிட்டால் நான் ஒரு தீரனின் நட்பையல்லவா இழந்திருக்க வேண்டும்!" —களுக்கென்று சிரித்தாள், சூர்யா.

அந்தச் சிரிப்பினால் அரண்மனையே ஆட்டங்கண்டு விடுமோ என்று கலங்கினான், காசிம். நகையொலிகேட்டு நங்கையின் முகத்தை ஒருமுறை நோக்கினான். விஷம் தாங்கு பாம்பின் படம் தான் அவனது நினைவிற்கு வந்தது. நிலை தவறிப் போய் விடுமோ என்று கருதி ஒரு முறை தன் இதயத்தைக் கிள்ளி முறைப்படுத்திக் கொண்டான்.

"நல்லது. இளவரசியாரே! எங்கள் சக்கரவர்த்திக்கு சிந்து நதி தீரம் மட்டுமல்ல; சிங்காரச் சிற்றிடையாள் ஒருத்தியும் கிடைத்திருக்கிறாள். அரசிளங் குமரியே! அன்னிய தேசங்களிலே நாங்கள் கவர்ந்த பொருள்களை, எங்கள் அரசருக்கு சேர்ப்பிப்பது தான் என்போன்றவரின் கடமை. எனவே இன்று மாலையே அரேபியாவுக்குச் செல்ல தயார் செய்து கொள்ளுங்கள்!"

கல் நெஞ்சு கொண்டோரும் சூர்யாவின் பேச்சுக்கு பல்லிளித்து நிற்கும் போது, காசிம் மட்டும் அவளை வெறுத் தொதுக்கிப் பேசியது அவளுக்குத் திகைப்பைத் தந்தது.

"தளகர்த்தரே! மலை நிகர்த்த நும் தோளை தழுவிடத் துடிக்கும் இந்த ஏந்திழையை விட்டு எங்கே செல்கிறீர்? உமது சக்கரவர்த்தி என்ன, உம்மைவிடச் சுந்தர ரூபரா?"—என்று சொல்லியபடியே சிறு நடை போட்டு அவனை ஆலிங்கனம் செய்து கொள்ளத் தாவினாள்,

காசிம் சீற்றம் கொண்டான்; "சீ, நாயே! எட்டி நில்! கடமையாற்றத் தவறிடும் மோகவசியனல்ல, நான்"—அதற்குமேல் அவன் அங்கு நிற்க வில்லை. சூர்யாவைக் கீழே தள்ளிவிட்டு அவன் நடையை முடுக்கினான்.

'களைத்துப் போன நெஞ்சோடு போர்முனையிலிருந்து காசிம் வருவான்-அவனைக் களிப்புக் கடலில் ஆழ்த்தி — பின்னர் கைப் பாவையாகவும் ஆக்கிக் கொள்ளலாம்' —என்று கனவுகண்ட சூர்யாவின் எண்ணங்களெல்லாம் தரையில் வீழ்ந்த கண்ணாடிப் பாத்திரம் போல் சுக்கல் சுக்கலாக உடைந்தன.

○ தொடர்ச்சி 10-ம் பக்கம்

# மலர் மணம் நுகர்ந்தோர்



**கா. வை. இராமையா, காட்டூர்.**

தன்மானத் துடிப்புள்ள தமிழனின் உரிமைப்போருக்கு முரசொலி கொட்டுகிறது! அறிஞர்களின் கற்பனைக் கருத்துயர் கட்டுரைகளும், 'கனிச்சுவை போன்ற கவிதைகளும், ஓவிய கைத்திறனும் ஒன்று கூடி எழில் மிக்க ஏட்டிலே மருமலராய் பூத்துள்ளது. அறிவுக்கு பரிசுதரும் வாசமலர், வாடா மலராய் வடிவு கொள்ள உறுதி கொள்ளும் "தமிழகம்" என்று நம்புகின்றேன்.

★

**ஜி. பராங்குசம்**

"மலர் மணம் தருமா ?

அவாள்! மலர் போல் இது களால் கொண்டு வர முடியுமா?" என்ற எண்ணம் பல உள்ளங்களில்! அதுகளுக்கு இன்று ஏமாற்றம் அளிக்கும் வகையில் 'முரசொலி' பொங்கல் மலர், நறுமலரை நாடிவரும் வண்டினம் போல், திராவிடத்தில் மக்களின் உள்ளத்தை கவர்ந்து விட்டது.

இதில் ஒவ்வொன்றையும் சுவைத்து இன்புறுகிறது இன்று திராவிடம்.

★

**சீனு-காந்தா, திருப்பத்தூர்.**

காதலி தரும் இன்பத்தைவிட தங்கள் மலர் அதிக இன்பத்தைத் தருகிறது. தங்களது 'மறத்தி', சுரதாவின் 'நக்கீரன் அறுபது'— போன்ற கவிதைகள், பள்ளிமாணவர்கள், கம்பராமாயணம் முதலியவற்றையே திருப்பித் திருப்பி படித்தவர்களுக்கு ஓர் புதுமைக் காவியம்.

★

**சௌரி, அதிராம்பட்டினம்.**

ஓவியங்கள், வர்ணச் சித்திரங்கள், ஆசிரியரின் மணிமகுடம், அண்ணாவின் அழகு தோற்றங்கள், ரோஜா மலர்களைப் போல் கலைமணத்துடன் கமழ்கிறது. நல்ல கவிதைகளையும் கருத்து நிறைந்த கட்டுரைகளையும் என்னால் மறக்க முடியவில்லை. வளர்க முரசொலி! வாழ்க முரசொலி!!

★

**மு. இராமையா, சென்னை.**

'அவாள்கள்' மூன்றரை ரூபாயிலும், நான்கு ரூபாயிலும் வெளியிடும் மலர்களைவிட தங்கள் "முரசொலி" பொங்கல் மலர் மணம் மிகுந்தது மட்டும் அல்லாமல், குறைந்த விலையிலும் அவர்களைத் தோற்கடித்து விட்டீர்கள்.

**பாரிமணாளன், உறையூர்.**

காணாத இன்பம் கண்டது போல மலரைப் பார்த்து களிப்புற்றேன்.

'கருணா'வின் கவிதையாம்<br>'மறத்தி'யால்<br>கனியாத உள்ளமும் கனிந்தது.

★

**சதாசிவம், இன்பவாழ்வு பதிப்பகம், கோவை.**

முரசொலி பொங்கல் மலர் ஒரு பொன் மலர். அதுவும் தென்றலின் முதல் மூச்சிலே மலர்ந்த நறுமணங் கமழும் பொன் மலர்!

★

**முனுசாமி, அமைந்தகரை.**

ஒரு தோழர் கடந்த வாரம் கேள்வி பதிலில் புதையல் கதை மலரில் இடம் பெறுமா என்று கேட்ட கேள்விக்கு, நீங்கள் 'பொங்கல் மலரே ஒரு புதையல் தான் தோழரே' என்று பதில் கொடுத்தீர்கள். நான் உண்மையிலே புதைப் பொருளை கண்டாலும் அவ்வளவு பூரிப்பு அடைய மாட்டேன். மலரைக் கண்டதும் மகிழ்ச்சி அடைந்தேன்.

★

**பாரதிதாசன் நூல் நிலையம், சென்னை 23**

முரசொலி பொங்கல் மலர் திராவிடத்தின் புதையல். மலரில் காணப்படும் கதைகள், கட்டுரைகள், கேலிச் சித்திரங்கள் யாவும் பொருளோடு வெகு நன்றாக இருக்கின்றன.

முரசொலியின் முகப்புச் சித்திரமானது பண்டைக் காலத்தில் எவ்விதம் தமிழர்கள் முத்துவியாபாரம் செய்தார்கள் என்பதை விளக்கி, இப்போது எப்படி வட நாட்டானிடம் நம் திராவிடம் அடிமைபட்டிருக்கிறது என்பதை விளக்கி, வீழ்ச்சியுற்ற திராவிட மக்களை எழுச்சியுறச் செய்கிறது.

திராவிடர் எதிர்பார்த்ததை விட முரசொலி மலர் மிக அருமையாக அமைந்ததைக் கண்டு நாங்கள் மகிழ்ச்சியுறுகிறோம்.

★

**சியூவாட்ச் கம்பெனி, தஞ்சை**

தங்களது முதல் முயற்சியே எவரஸ்ட் சிகரத்தை எட்டிப் பிடித்துவிட்டது என்றால், அது மிகையல்ல. இந்த அருமையான மலர் பொங்கற் புது நாளன்றே கிடைக்காமற் போனது தங்கள் உடல் நலம் குன்றியதே என அறிந்து ஆறுதலடைகிறோம்.

★

**ச. இராமையன், கடலூர்.**

'முரசொலி' பொங்கல் மலரைக் கண்டேன். நுழைவிற்கு முன் இதற்கு ரூ. 2 போதாதென்றெண்ணினேன். ஆயின் உள் நுழைந்த பின் வெட்கித் தலை குனிந்தேன். ஆரம்பத்தில் தலையை கொடுத்தும் வாங்குவோமென்றுரே ஓர் தோழர்—அதை யான் மீண்டும் நினைவுபடுத்தத்தான் முயலுகின்றேன். அஃதாவது 'தலைகொடுத்தும் வாங்கலாம்' என்றுதான் கூறுகிறேன்.

★

**சங்கரசுப்பு, மதுரை.**

இப்பொழுது என் கையில் முரசொலி பொங்கல் மலர் தவழுகிறது. பலர் சுற்றிச் சுற்றி ஆர்வத்துடன் பார்த்துப் பார்த்து மகிழ்கின்றோம். முதல் பார்வையிலேயே வெகு பொருத்தம் என்று எங்கள் தீர்ப்பு! அடுத்து உட்புகுந்துகதை, கவிதை, கட்டுரைகளைப் படித்து மேற்கொண்டு எழுதுகின்றோம். அதற்குள் ஒன்று: அது இதுதான்:

'எட்டாவது அதிசயம்' என்ற தலைப்பில் அழகு தாங்கிக் கண்ணைக் கவரும் ஓவியம் கருத்தைக் கவ்வுகிறது. ஆனால் விளக்கம் தெளிவுபட எங்களுக்குப் புலப்படவில்லை. பொதுவாக நோக்குமிடத்து, வருங்காலத்தில் திராவிடத்தின் ஆட்சியில் கிளியும் பூனையும் ஒன்றாக நின்றுலாவும் என்பதாக. ஆனால் அதன் உட்பொருள் முழுதும் என்ன என்ற விளக்கம் அறிய வெகுவாக அவாவுகின்றோம்.

★

**மனோரஞ்சிதம், சென்னை-1.**

பெரியாரையும் அண்ணாவையும் இந்நாட்டில் இரு கண்களாகக் காட்டி இருப்பது முற்றிலும் பொருத்தமாக அமைந்துவிட்டது. அண்ணாவின் அழகிய வண்ணப் படம் கண்ணாடி சிறையில் தள்ள வசதியாக உள்ளது. கல்லறையில் தூங்கும் அஞ்சாநெஞ்சன் நம் இதய வீட்டில் குடியேறிவிட்டார் தன் எழிலுருவுடன். மறைந்த மாணிக்கங்களின் மறையாத ஒளி நன்றாகப் பிரகாசிக்கிறது.

'இவர்களிடையே' என்று அண்ணா, 'அவர்களை' அறிமுகப் படுத்தி இருப்பதை என்னால்-இச் சிறியேனால் எப்படி பாராட்டுவது என்பதே புரியவில்லை. மலரே ஓர் மனோரஞ்சிதம் என்று சுருக்கிக் கூறினால் அது வெறும் பேச்சல்ல!

★

**மதிவாணன், அறியலூர்**

எழுதுங்கால் கோல்காணாக்<br>கண்ணே போற் கொண்கண்<br>பழிகாணேன் கண்டவிடத்து.

பொங்கலன்று முரசொலி மலர் கிடைக்கப் பெறாமல் வாட்டமுற்றிருந்து தங்கள் காரியாலயத்தினரை வைதுகொண்டிருந்த என் உள்ளம். (காலதாமதமாக) மலர் கிடைக்கப் பெற்றதும் மேற்கண்ட குறளே போல் வாட்டமெல்லாம் விடை பெற்றுக் கொள்ள களிப்புக் கடலில் ஆழ்ந்தேன். மேலெழுந்தவாறு மலரை முகர்ந்த நிலையில், அதன் மணத்தில் லயித்திருக்கிறேன்.

விரிவுரை—மலரை அணு அணுவாக முழுதும் நுகர்ந்த பின்.

★

**செல்வராசன், பெங்களூர்-3.**

முகப்புப் படம் தினமும் திரும்பத் திரும்ப பார்க்க வேண்டிய உயிரோவியம். நான் வருந்துகிறேன், முத்துக்களும், முல்லை சிரிப்பைச் சிதறும் பூங்கொடிகளும் வாழ்ந்த காலத்தில் நான் பிறக்கவில்லையே என்பதற்காக! ஒவ்வொரு பக்கத்திலும் பயனுள்ள புதுச்செய்திகள், ஓவியங்களின் நர்த்தனம், அண்ணாவின் அழகுப்படம், சுரதாவின் அறுபது, சுவைக்கச் சுவைக்கத் தேனூறும் மணிமகுடம் (பாதிதான்) எல்லாமே திராட்சைக் கொத்துகள்! சுருக்கமாகச் சொன்னால், சுலபத்தில் ஜீரணிக்க முடியாத சுவையான அறிவுப்பொங்கல் முரசொலி மலர்!

★

**தில்லை அல்லி, சிதம்பரம்**

சர்க்கரைப் பொங்கல் இனிக்கவில்லை; கரும்பில் சுவையில்லை; தீங்கனியோ சப் பென்றிருக்கிறது. காரணம்? அமுதம் உண்டதால்! ஆம், தமிழெனும் அமுதத்தைப் பல் சுவைகளிலும் குழைத்துப் பொங்கல் மலரெனத் தந்துள்ளது. முரசொலி! இனிப்பிலும் பலவகையுண்டல்லவா? அப்படித்தான் அருமை அண்ணாவின் 'இவர்களுக்கு இடையே' என்னும் சூழ்நிலை விளக்கும் சுவைக் காவியத்துடன் தொடங்கும் பொங்கல் மலர், பக்கத்திற்குப் பக்கம் புதுப் புதுச் சுவையுடன் விளங்குகிறது. மொத்தத்தில் பொங்கல் மலர் ஒரு இனிப்புக் களஞ்சியம்!

★

**கந்தசாமி, ஹெல்த் அசிஸ்டெண்ட், கோபி.**

மலர் நாட்டோரின் சிக்கலைத் தீர்க்கிறது. நாம் யார் என்பதை நாட்டவருக்குத் தெள்ளத்தெளிய உணர்த்துகிறது. காண்பவர் வியக்கும், கலைப்படைப்பு! அறிவியக்கத்தின் பகுத்தறிவு முழக்கம்! வைர எழுத்துக்களால் பொறிக்கப்பட்ட பொன்ஏடு! சனாதனிகள், சந்தர்ப்பவாதிகள் இவர்தம் நெஞ்சு துளைக்கும் கூர்வாள்! மலர்கண்டு நான் வியக்கிறேன்; நாடு வியக்கிறது!




# ★ நல்ல தீர்ப்பு! ★

## சிங்கத் தம்பிகளே! தங்கத் தங்கைகளே!

பொங்கல் வந்தது. உங்களுக்கெல்லாம் கொள்ளை மகிழ்ச்சியும், கொண்டாட்டமும, குதூகலமும் சேர்ந்து வந்தது. பொங்கல் உண்டீர்கள்; பேருவகைக் கொண்டீர்கள். ஆனல் உங்களுக்கெல்லாம் ஒரு பெரிய குறை - பொல்லாத வருத்தம்! அந்தக் கோபத்தைத் தாங்கிவந்த கடிதங்கள்தான் எவ்வளவு?

"என்ன இருந்தாலும் இப்படி எங்களை ஏமாற்றக்கூடாது. பக்கம் பக்கமாகப் புரட்டினேன்; தேடினேன். பொங்கல் மலரில் பிறைவானத்தின் வாடையையே காணேமே, ஏன்?" என்று கேட்டிருக்கிருன் பெங்களூர்த் தம்பி கண்ணன்.

"அரும்பு சிரிக்கும்; பிறை வானம் பொலிவு பெறும்- என்றீர்களே! 'அரும்பை'க் காணுமல் எனக்குக் கரும்பே இனிக்கவில்லை, போங்கள்" என்று எழுதியிருக்கிறது தேனீத் தங்கை மல்லிகா.

"ஆசிரியரின் படமும், பிறைவானமும் இல்லாதது மலரின் குறைகள்" — இப்படி வருந்தியிருக்கிறது தில்லை நகரத்து அல்லி.

இவர்களுக்கெல்லாம் என்ன பதில் சொல்வது? அரும்பு வராததிற்குக் காரணம்தான் உங்களுக்குத் தெரியுமே! ஆசிரியர் அவர்களுக்கு ஏற்பட்ட கண்நோய்தான் காரணம். பொறுத்துக் கொள்ளுங்கள்; பிறகு பார்த்துக் கொள்ளலாம்.

நிற்க, "எங்களது எஸ். எஸ். எல். சி. பாடப் புத்தகத்திலிருக்கும் 'யூசப்' என்ற ஆங்கிலப் பாடலை தமிழில் கதையாகத் தாருங்களேன்; மிக உதவியாக இருக்கும்" என்று சிதம்பரம் என்ற காங்கேயத்துத் தம்பியிடமிருந்து கடிதம் வந்திருக்கிறது. ஆகவே, தம்பியின் ஆசையே இந்த வாரக் கதை! படியுங்கள்.

★

இரவு நேரம். கரிய இருள்! நாற்புரமும் கோர அமைதி—அசைந்தாடிக் கொண்டிருந்த கரிய மரங்கள்—அவை ஊட்டிய பெரும் பயம்—அப்பப்பா! எவ்வளவு பயங்கரமான நேரம்! மனிதன் வெளியே தலைகாட்டவும் அஞ்சும் சமயமல்லவா!

ஆனல்.........

அதோ பாருங்கள்...... அந்தக் கும்மிருட்டிலும் ஒரு குள்ளமான உருவம் ஓடிக்கொண்டிருப்பதை. அவன் ஓட்டத்தில்தான் எத்தனை வேகம்! அவசரம்! துடிதுடிப்பு! யார் அவன்? இந்த நள்ளிரவில் அவன் மட்டும் தனி மனிதனுக ஏன் ஓடிக்கொண்டிருக்கிருன்? சற்றுப் பொறுப்போம்; பார்த்து விடுவோம்!


ஓடிக்கொண்டிருந்த அவன் ஓரிடத்தில் 'சடக்'கென்று நின்ருன். கொஞ்ச தூரத்தில் தெரிந்த ஏதோ ஒன்றைப் பார்த்துத்தான் அவன் நின்றுவிட்டான். அங்கே? ஒரு குடிசை; அதனுள் ஒரு சிறிய விளக்கு; அது தந்த 'மினுக் மினுக்' கென்ற வெளிச்சம்! அவைகள்தான் அவனை நிறுத்தி விட்டன. அவன் மறுகணம் மீண்டும் ஓடினுன். அந்தக் குடிசையை நெருங்கினுன். நுழைந்தான்.

குடிசையினுள் யூசப் என்ற ஒரு அராபிய மனிதர் உட்கார்ந்திருந்தார். அமைதி நிலவியிருந்த அவரது முகம், தன் எதிரில் ஓடிவந்து நின்ற அந்த மனிதனைக் கண்டதும் திடுக்கிட்டது. என்னவோ ஏதோ என்று பயந்தது.

அதற்குள் அந்த மனிதனே பேசிவிட்டான். இல்லை; இல்லை. அழுதேவிட்டான். "ஐயா! நீங்கள்தான் என்னைக் காப்பாற்ற வேண்டும். நான் தவறி விட்டவன். வாழமுடியாதவன். தவறுகள் பல செய்தவன். உலகமே என்னை வெறுக்கிறது. விரட்டுகிறது. இன்று இரவு நான் இங்கு தங்கலாமா? எனக்குக் கொஞ்சம்

● தொடர்ச்சி 12-ம் பக்கம்

## காட்சி என்ன காட்சியோ!



"அடடா! என்ன வேடிக்கை; என்ன வேடிக்கை! எங்கே இந்தக் காட்சி?" என்று கேட்கத் தோன்றுகிற தல்லவா, பக்கத்திலிருக்கும் படத்தைக் காணும் போது. கேட்பது தவறே அல்ல; ஏனெனில் இது காண முடியாத காட்சி! இந்தப் 'பத்து வயது கண்ணாடிக்கார பெரிய மனிதரை'யும், 'எட்டு வயது பாட்டியம்மா'வையும், 'ஐந்தே வயது பால்காரனை'யும் வீடுகளிலா காண முடியும்? அல்லது தேடித்தேடி அலைந்தால்தான் கிடைப்பார்களா? ஊஹூம் ... கிடைக்கவே மாட்டார்கள். ஆனல், இந்த விசித்திர உருவங்களை சென்னை கண்டது—பொங்கல் தினத்தன்று. அன்று எழும்பூர் அழகிரித் திடலில் நடைபெற்ற பொங்கல் விழாவில்தான் இந்த மழலைச் செல்வங்கள் சக்கை போடு போட்டன. அவர்களின் நாடகத்தை-'கனிர்' என்று 'கல கல' வென சிரித்து, பாடி நடித்த நாடகத்தைக் கண்டு பரம்பரை நடிகர்களே மூக்கில் விரலை வைத்து விட்டார்களென்றுல், பார்த்துக் கொள்ளுங்களேன்! என்ன இருந்தாலும் சிங்கத் தம்பிகள் அல்லவா! தங்கத் தங்கைகள் அல்லவா!

அன்றைய சிறுவர் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட தம்பி ...கைகளை 'பிறைவானம்' ...த்துகிறது!

## சிறிய வயதிலே

ஒரே மழை! கொட்டு கொட்டென்று கொட்டிக் கொண்டிருந்தது. மேலே ஒரே மூடுபனி; கீழே சேறும் சகதியும்! அந்த நேரத்தில் சொட்டும் மழையில் வாட்டும் குளிரில் ஓடிக் கொண்டிருந்தான் ஒரு சிறுவன்.

அவன் கையிலே ஒரு புத்தகம் இருந்தது. அது மழையில் நனைந்து விடக்கூடாது என்று எண்ணினுனே என்னவோ, பத்திரமாகத் தனது கிழிந்த சட்டைக்குள் மறைத்துக் கொண்டிருந்தான். இன்னும் ஓடிக் கொண்டிருந்தான். வேகமாக ஓடிக் கொண்டிருந்தான். மழையோ ஓயவில்லை.

கொஞ்ச தூரம் இப்படியே ஓடினுன். அதற்குள் பக்கத்து கிராமத்தை அடைந்து விட்டான். ஒரு வீட்டின் வாசலில் நின்ருன். படபட வென்று கதவைத் தட்டினுன். "யார் இந்த நேரத்தில்?" என்று கேட்டபடியே கதவைத் திறந்தார் ஒரு பெரிய மனிதர்.

மறுகணம் "அடடா! ஏன் தம்பி இந்த மழையில் இப்படி நனைந்து வந்தாய்?" என்று கேட்டார். அவருக்கு ஒரே படபடப்பு; துடிதுடிப்பு!

பையன் தன் முகத்தில் ஓடிக்கொண்டிருந்த தண்ணீரை வழித்துக் கொண்டே, "இன்று தருவதாகச் சொல்லியல்லவா, இந்தப் புத்தகத்தைப் படிக்க வாங்கிச் சென்றேன்; அதனுல்தான் கொடுக்க வந்தேன். மழை விட்ட பாடில்லை; சொன்ன சொல்லை மீறவும் எனக்கு மனமில்லை" என்ருன்.

அந்த மனிதருக்கு ஒரே மகிழ்ச்சி! தம்பியின் பெருந்தன்மையை -அருங்குணத்தைக் கண்டு வியந்தார். அவனுக்கு வேறு உடைகள் கொடுத்தார். படிப்பதற்கு வேறு புத்தகங்கள் கொடுத்தார்.

இரவல் புத்தகங்கள் வாங்கிப் படித்த அந்தத் தம்பியார் தெரியுமா? அவன்தான் அடிமை விலங் கொடித்த மாவீரன் — அமெரிக்க நாட்டு ஆப்ரஹாம் லிங்கன்!

பெரிய மனிதர்கள்

## தங்கப்……

★ 7-ம் பக்க தொடர்ச்சி

காசிம்—அந்தக் கர்மவீரன் சூர்யாவின் கண்களுக்கு செந்தேளாகக் காட்சி தந்தான். அந்தத் தேளை நசுக்கி எறியா விட்டால் சூர்யா கண்ணயரமாட்டாள். அக்கினிப் பிழம்பாகக் காட்சிதந்த அவளது விழிகள் இந்த சேதியைத் தான் பறைசாற்றின.

★

அன்றையதினம் பாக்தாத் நகரம் அல்லோலப் பட்டது. வெற்றி வீரன் காசிம் சிந்துவைப் பணிய வைத்தபிறகு, கன்னோசி மீது படையெடுத்துச் சென்றிருந்த போதுங்கூட, அவன் கைப்பற்றிய பொருள்களெல்லாம் அரேபியாவின் தலைநகருக்கு எல்லாவிதச் சிறப்புகளுடனும் வந்துகொண்டிருந்தன. பொன்னும், மணியும் சுமந்த ஒட்டகங்கள் எறும்பு வரிசையைப்போல பாக்தாத் நகருக்குள் நுழைந்தவண்ணமிருந்தன, தலைநகரெங்கும் ஒரே குதூகலம்!

சக்கரவர்த்தியின் பள்ளியறையிலும் அப்படித்தான்! சூர்யாவும், சக்கரவர்த்தியும் சேர்ந்து எழுப்பிய ஆரவாரம் அரண்மனை மதில் சுவர்களைத் தாண்டி வெளியிலும் எதிரொலித்தது.

திடீரென்று சூர்யாவின் சிரிப்பொலி தடைபட்டு நின்றது; மெல்லென அதிரும்வீணை,நாதமெழுப்ப மறுத்ததைப்போல!

சூர்யா சிலையானாள்; அவளது கயல் விழிகளிலிருந்து நீர்த் துளிகள் தரையைத் தொட்டன.

சக்கரவர்த்திக்கு ஒன்றும் விளங்கவில்லை. கற்கண்டுக் கட்டியைச் சுவைத்துக்கொண்டிருக்கும்போது, அது திடீரென்று கருங்கல் கட்டியாக மாறிவிட்டால்...? அப்படித்தான் இருந்தது அரேபியா அரசருக்கும்.

"வேந்தர்க்கு வேந்தே! ஆண்டவனின் பூஜைக்கு என்று பூத்திருக்கும் ரோஜா மலரை அர்ச்சகன் நுகர்ந்துவிட்டால், அவனை நீங்கள் என்ன செய்வீர், அன்பரே?" — தலை குனிந்தபடியே வாயை அசைத்தாள் சூர்யா.

"அந்த அயோக்கியனை கண்டதுண்டமாக வெட்டிப் போடுவேன், கண்ணாட்டி" — வீராப்போடு பதில்சொன்னான் வேந்தன்.

"இந்த ரோஜாவையும் நீங்கள் நுகருமுன்னரே ஒரு பூசாரி கசக்கிவிட்டான், பிரபோ!" — கண்ணீர் உகுத்தாள் சூர்யா.

"யார் அந்தக் கயவன்?" — கொதித்துக் கிளம்பினான் வேந்தன்.

"யாராயிருக்கும்? எல்லாம் உங்கள் தளகர்த்தர் காசிம்தான்!" —துயரத்தைத் தாங்கமாட்டாதவள்போல விம்மினாள், அவள்!

சக்கரவர்த்தி பதில் பேசவில்லை. தரையைத் தொடும் தாடியைத் தடவியபடியே, வில்லிலிருந்து புறப்படும் அம்புபோல வெளிக்கிளம்பினான். ஆனால் சூர்யா மட்டும் 'என்ன நடக்குமோ' என்று நடுங்கியபடியே நின்றுகொண்டிருந்தாள்.

★

மறு நாள்-இரவு நேரம். மேகக் கூட்டத்திடையே ஒளிந்துகொண்டு 'கண்ணாமூச்சி' விளையாடியபடி இருந்தது நிலவு. மோனத்திலிருக்கும் முனிபுங்கவரைப்போல வானத்தில் இறைந்துகிடக்கும் நட்சத்திரங்களை உற்று நோக்கியபடி உட்கார்ந்திருந்தாள் சூர்யா. 'இந்த யுக்தியும் பலிக்காவிட்டால் காசிமை எப்படிப் பழிவாங்கலாம்'—என்று நினைத்தபடி சிந்தனைக் குதிரையைத் தட்டிவிட்டாள்.

அப்போது சிப்பாய் ஒருவன் 'சலாம்' செய்தபடி வந்து நின்றான். அவளது நினைவுச் சங்கிலியும் அறுந்து விழுந்தது.

"இளவரசியாரே! சக்கரவர்த்தி இதைத் தனது அன்பளிப்பாக உங்களிடம் கொடுக்கச் சொன்னார்"-என்று சொல்லி நகர்ந்தான் அந்த வீரன். உடன் இரண்டு பணியாட்கள் ஒரு பேழையைத் தூக்கிவந்து அவள் எதிரே வைத்தனர்.

ஒரு ஆள் உயரமுள்ள பேழை-தங்கப் பேழை, அது! அதிலே வெள்ளியினால் பிறையொன்று பொறிக்கப்பட்டிருந்தது.

நடுங்கும் விழிகளுடன் சூர்யா பேழையைத் திறந்தாள். திறந்தவுடன் அவளது கண்கள் கமலமென விரிந்தன.

அந்தத் தங்கப் பேழையினுள்ளேதான் பிராமண பதம் அழித்த வீரன்-சிந்து பூமியை வென்ற சூரன் - சிபிஸ்தானத்தை வாகை சூடிய தீரன் — முகமது காசிம் தூங்கிக்கொண்டிருந்தான்-பிணமாக! வேதியர் பூமியிலே பிறைக்கொடி பறக்கவிட்ட அந்தக் கடமையாளன் சாவிலும் சிரித்தபடிதான் இருந்தான்! ஆனால் சூர்யாவின் கண்கள் மட்டும் நீர் உகுத்தன. வீரனொருவன் அநியாயமாக வீழ்த்தப்பட்டானே என்று வெளிவரும் சோகக் கண்ணீரல்ல, அது! அந்தணர் வம்சம் எப்படியெல்லாம் பகைவரை வெட்டிச் சாய்க்கும் என்பதை உலகிற்கு எடுத்துக் காட்டும் ஆனந்தக் கண்ணீர்தான், அது!

— மாறன்

## தூக்கிலே……

★ 5-ம் பக்கத் தொடர்ச்சி

*அங்கெல்லாம் ஆளவந்தவர்களின் சொல்லுக்கும், செயலுக்கும் பேதமில்லை. நேற்று போட்ட திட்டங்கள் இன்று நிறைவேற்றப்படுகின்றன.*

*மோதிலால் மைந்தரின் ஆட்சியிலே இருட்டுச் சந்தையிலே செல்வம் குவித்தவர்களெல்லாம் தூக்கு மரத்திலே தொங்கவில்லை; டவுன் காங்கிரஸ் கமிட்டித் தலைவர்களாக இருக்கிறார்கள்!*

*ஏனய்யா இந்த வார்த்தை ஜாலம் என்று கேட்டால்,அதை மறைக்க அவர் சோஷலிச கீதம் பாடுகிறார்.*

*உறுதிமொழி தந்துவிட்டு பின்னர் கொலுபீடம் ஏறியதும் அவைகளைக் காற்றிலே பறக்கவிடுபவர்களை பொது வாழ்வில் நாம் அதிக நாள் பார்க்கமுடியாது. அவர்களும், அவர்கள் சார்ந்திருக்கும் கட்சிகளும் அரசியல் வானத்திலிருந்து விரைவில் உதிர்ந்து விழப்போகும் நட்சத்திரங்களாகத்தான் இருக்கமுடியும்!*

*ஜனநாயகத்தின் அணைப்பிலே வளர்ந்து, பின்னர் சர்வாதிகார அனல் கக்கிய சியாங்கே ஷேக் பார்மோசாவுக்குள் பெட்டிப் பாம்பாக ஒடுங்கி விட்டதை நாம் பார்த்திருக்கிறோம்.*

*அழகு நிலவாய் காட்சி அளித்து, அவைக்கூடம் நுழைந்ததும் 'அமாவாசை' யாகி விட்ட டிவேலரா இன்னும் அயர்லாந்திலே உயிர் வாழ்கிறார். மதிப்பில்லாமல்!*

*"வாய்ச் சவடால்காரராக இருக்காதீர்கள்; குறைவாகப் பேசுங்கள்; பேசியதை செயல்படுத்துங்கள்"-உலக வரலாறு தரும் இந்தஉண்மையைத்தான் ஆவடியிலே கூடிய சீமான்களுக்கு உணர்த்த விரும்புகிறோம்.*

★



அழகுள்ள இருதோளின் இடையில் வந்து,
　　அகப்பட்டுக் கொண்டுள்ள உடலின பந்தே!
கிழவயதில் நரைக்கிற தலையே! பேச்சைக்
　　கொஞ்சநகேள்; பணக்காரன் கொடுமை யாலே,
அழுதுவரும் தொழிலாளர் உலகு தன்னை,
　　ஆவிதனைக் கொடுத்தேனும் சிரிக்க வைப்பாய்.
செழுந்தொண்டு செய்பவரை வணங்கு, மார்பைத்
　　தட்டிவரும் பகைகண்டு, குனிந்தி டாதே!

வெள்ளைநிலா வின் நிழலே! பளிங்கு வாசல்
　　வடிவத்தில் இருக்கின்ற விழிகாள்! நீங்கள்,
வெள்ளிநுரைக் கடல்மீது எழும் நெருப்பு
　　வட்டத்தைப் பாருங்கள்; விரல்கள் சேர்த்துக்
கிள்ளுகின்ற மலர்பார்த்து மகிழ்வீர்; பச்சைக்
　　கிளி நிறத்துப் பயிரினத்தைக் காண்பீர்--ஆனால்
கொள்ளையிடும் ஆரியர்கள்; கோயில் கல்லைக்
　　கடவுளெனக் காட்டிடுவர், காணா தீர்கள்;

இனிக்கின்ற உச்சரிப்பை விரும்பும் வள்ளை
　　இலைபோன்ற காதுகளே; இதனைக் கேட்பீர்
பனிக்காலம், மழைக்காலம், குயிலின் கூட்டம்
　　பாடுகின்ற சுடுங்கோடைக் காலம்—என்னும்
தொனி தன்னைக் கேட்டிடுவீர்; அதனை அன்றி,
　　சயபுத்தி, ராகுதசை முற்பிறப்பின்
வினைத்துன்பம், விதி—என்னும் பேச்சைக் கேட்டால்,
　　வெடுக்கென்று வெண்பஞ்சால் அடைத்துக் கொள்வீர்!

முத்தைப்போல் இருக்கின்ற பற்கள் தம்மை
　　மூடிவரும் பழக்கதவே! சிவந்த வாயே!
சத்துள்ள முத்தமிழின் நுட்பந் தன்னைத்
　　தரணியிலே பறைசாற்று. தமிழர் நாட்டு
ரத்தத்தின் கதைதன்னைப் புகழுக! ஆனால்
　　ராமபிரான் என்பவனை; அவனைப் பற்றிக்
கத்திவரும் காவியத்தை; ஒழுக்கங் கெட்டக்
　　கயவர்களை. ஒரு நாளும புகழ்ந்தி டாதே!

மேல்உடலின் இருகிளையே! பொருளைத் தந்து
　　வாங்குகிற வழக்கமுள கைகாள்! நீங்கள்,
நூல் தன்னை எழுதுங்கள்; சோன் கைபோல்,
　　நிச்சயமாய் வாள்வீசப் பழகிக் கொள்வீர்!
வேல்வீரர், பேரறிஞர் மூத்தோர்க் கெல்லாம்,
　　மரியாதை காட்டுங்கள். ஆனால் ஒன்று;
பால் அருந்தும் பாம்புதனை வணங்கினாலும,
　　பார்ப்பானை ஒருபோதும் வணங்க வேண்டாம்!

நன்றிமற வாதகுணம் படைத்த நாயின்,
　　நாக்கைப்போல் அமைப்புள்ள கால்கள்! நீங்கள்
குன்றுள்ள இடம்நோக்கி நடந்து செலவீர்.
　　குளிர்கடலும், காவிரியும் தொட்டுக் கொள்ளும்
பொன்மேனிக் கண்ணகியின் ஊரைப் பார்க்கப்
　　புறப்படுவீர்; பாசறையை மிதிப்பீர்; ஆனால்,
அன்பர்களே! மடம்நோக்கி வருக—என்று
　　அழைப்பார்கள், அவ்விடத்தை மிதிக்கா தீர்கள்

கலைத்தோட்டம்.

# ஔரங்கசீப்பின் சங்கீத இலாக்கா!

ஆல் - இந்தியா - ரேடியோவை மக்களிடமிருந்து பிரிப்பதற்காகவே ஒரு அமைச்சர் இருக்கிறாரே, அவரைப் பற்றி தெரியுமா உங்களுக்கு? அவர் பிரான்சிலே படித்து இலக்கியத்திலே ஒரு பட்டம் வாங்கியிருக்கிறார். போட்டோ எடுப்பதும், சங்கீதமும்தான் அவரது பொழுதுபோக்குகளாம். 1922—ம் ஆண்டிலிருந்தே அவர் காங்கிரசில் இருந்து வருகிறார். அந்த 'தகுதி'களை நினைவில் வைத்துத்தான் நேரு அவர்கையில் இந்த நாட்டு சினிமாவையும், ரேடியோவையும் ஒப்புவித்தார். பாவம்! நேருவுக்கு இவரைப் பற்றி அதிகம் தெரியாது போலும்! 51 — வயதுள்ள கேஸ்கர் சங்கீதத்தை ரசிப்பதில் ஔரங்கசீப்பையும் தோற்கடிக்கக் கூடிய வல்லமை பெற்றிருப்பது தினந்தினம் ரேடியோவைத் திருப்பும் நமக்குத்தானே அதிகம் தெரிந்திருக்கும்!

சினிமா சங்கீதத்திற்கு ரசிகர்கள் கூட்டம் பெருகிவருவது எல்லோருக்கும் தெரிந்த உண்மை. இதன் காரணமாகவே 1947—ல் இரண்டு லட்சத்து எழுபதாயிரமாக இருந்த ரேடியோ லைசென்சுகள் 1952-ல் ஏழரை லட்சத்துக்கும் மேலாக் வளர்ந்திருக்கின்றன. இந்த 30 சதவிகித வளர்ச்சி கேஸ்கர் பட்டத்துக்கு வந்ததும் அவரது கண்களை உறுத்தியிருக்கிறது. எனவேதான் 1952-ல் அவர், 'ரேடியோவிலே ஒலிபரப்பப்படும் சினிமா சங்கீதம் ஆபாசமாயிருக்கிறது' என்று அறிவித்து விட்டார். அவரது ஆணையைத் தலைமேல் தாங்கியரேடியோக்கள் சினிமா சங்கீதத்தை ஒலிபரப்பமறுத்து விட்டன. சென்னை போன்ற மாநிலங்களில் பக்திச் சுவையைக் காக்க வந்த பெம்மான்களாம் ஆச்சாரியார் போன்றோரின் தூண்டுதலால் ரேடியோக்களில் வெறும் பஜனைகீதங்களாக ஒலிபரப்பப்பட்டு வந்தன.

கேஸ்கரின் இந்த சீற்றத்திற்கு இந்திய படமுதலாளிகள் சங்கத் தலைவர் சுண்டுலால் ஷா கொடுத்த மறுப்பு இருக்கிறதே, அது மிகவும் சுவையானது!

கேஸ்கரின் அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டு மத்திய சென்சார் போர்டு என்று ஒரு அமைப்பு இருந்து வருகிறது. மத்திய சென்சார் போர்டின் அனுமதியின் பேரில்தான் இமய முதல் குமரிவரை பரந்து கிடக்கும் 3200—தியேட்டர்களிலும் சினிமாக்கள் காண்பிக்கப்படுகின்றன.

அந்த 3200 சினிமா தியேட்டர்களில் நாளெல்லாம் முழங்கும் பாட்டுகள் ரேடியோவில் மட்டும் ஒலிபரப்பப்படக் கூடாதாம். ரேடியோவிலே மட்டும் அந்தப் பாட்டுகளைத் தடை செய்த மந்திரி, அவருடைய ஆணையின் கீழுள்ள சினிமாவில் மட்டும் அனுமதிக்கக் காரணமென்ன?

சினிமாவிலே கேட்டு ஆனந்திக்கும் பாடல்களை திரும்பவும் ரேடியோவிலே கேட்பதற்கு பொதுமக்கள் ஏன் அனுமதிக்கப்படவில்லை?

இப்படிக் கேட்டவர், சுண்டுலால் ஷா மட்டுமல்ல; இந்த நாட்டின் நாற்பது கோடிக்கும் மேற்பட்ட பிரஜைகள் கேட்டனர்.

இந்த ஏகோபித்த கேள்விகளுக்கெல்லாம் கேஸ்கரிடமிருந்து சுண்டுலால்ஷாவிற்கு ஒரே ஒரு பதில்தான் வந்ததாம்.

"நான் மீண்டும் ஒரு விவாதத்தில் கலந்துகொள்ள விரும்பவில்லை. இந்த முடிவு தீர்க்கமான யோசனைக்குப் பிறகுதான் செய்யப்பட்டது என்று நான் கருதுகிறேன்" -இதுதான் கேஸ்கரின் பதில்.

இந்த 'நான்' என்னும் அகங்காரம் பொதுமக்களின் வாக்கு பெற்ற பாராளுமன்றம் நுழைந்திருக்கும் அரசியல் தலைவர்களுக்கு இருக்கலாமா-என்று கேட்கிறார், 'பிலிமிண்டியா'வின் ஆசிரியர் பாபுராவ் பட்டேல்.

● தொடர்ச்சி 12-ம் பக்கம்

# கனவு உலகக் காதலன்!

மாரனே; மன்மதனுக்கு உதாரணமே!—என காண்பவர் வர்ணிக்கும் தோற்றத்தினன்; சந்திர பிம்பமோ இவனது முக வசீகரம் என்று வியக்கத்தக்க சுந்தர ரூபன்; அவன்தான் அமெரிக்க நாட்டுப் பெண்களின் கனவு உலகக் காதலனாயிருந்த வேலண்ட்டினோ! ஹாலிவுட்டின் தலை சிறந்த நட்சத்திர நடிகன்!

1913-ம் ஆண்டிலே பதினெட்டு வயதுடைய வாலிபனை அமெரிக்காவிற்கு வந்தான். விளக்குமாறுகள் வைப்பதற்காக ஒதுக்கப்பட்டிருந்த இடம்தான் அவனுக்குக் கிடைத்த வாசஸ்தலம். மற்றவர்கள் வீசி எறிந்த செய்தித்தாள்கள்தான் அவன் படுப்பதற்கென்று சேர்ந்தெடுத்துக்கொண்ட இரத்தனக் கம்பளம்! சில சமயம் பார்க் பெஞ்சுகளிலே, நாடோடியைப் போல தூங்கியிருக்கிறான், அவன்!


ஹோட்டல்களிலே எச்சிற் பாத்திரங்களைக் கழுவி ஜீவனம் நடத்தினான்.

1925—ம் ஆண்டிலே வேலெண்ட்டினோ நடித்த படமென்றால் டிக்கெட் வாங்க முடியாமல் கூட்டத்தில் நசுக்கப்பட்டு மாண்டோரின் தொகையை கணக்குக் காட்டின அமெரிக்கப் பத்திரிகைகள். எங்கும் அவனைப்பற்றிய பேச்சுதான்; எப்போதும் அவனது நடிப்பைப்பற்றிய விமர்சனம்தான்!

எப்படி வந்தது இந்த மாற்றம்?

வேலெண்ட்டினோ இத்தாலியிலிருந்து அமெரிக்காவிற்கு கப்பலிலே மிதந்து வந்தகாலே, காரிகையொருத்தியோடு நட்பு கொண்டான்; அவர்களிடையே காதல் அரும்பு முன்னரே அவர்கள் பிரிய வேண்டியிருந்தது.

ஓட்டலிலே வேலை பார்த்து வந்தபோதுதான் வேலண்ட்டினோ அந்தக் காரிகையைச் சந்தித்தான். தனிபொருத்தியாக அல்ல! கார்லைல் என்ற அந்த நடிகை கிங் என்ற டைரக்டரை மணந்துகொண்டு தம்பதிகளாக அவன் முன்பே



நின்றனர்

அந்தச் சமயம்தான் படமுதலாளி ஒருவர் ஜூலியோ எனும் வேஷத்திற்கு தகுந்த ஒரு பாத்திரத்தை தேடி அலைந்து கொண்டிருந்தார். வேலெண்ட்டினோ ஜூலியோ பாத்திரத்திற்குத் தேவையான உருவ அமைப்புகளைப் பற்றியெல்லாம் முன்னரே தயார் செய்து கொண்டான். கார்லைல் ஏற்பாடு செய்த விருந்திலே, எதிர்பாராதவிதமாகவேலண்ட்டினோ ஜூலியோவாக நடித்து, பார்ப்போரை பிரமிக்க வைத்தான். நாடகம் பார்த்த பட்டாதிபதியும் அவனையே அந்தப் படத்தின் கதாநாயகனை நடிப்பதற்கு ஏற்பாடு செய்தார். அன்று முதல் அவனது எதிர்காலம் ஏற்றம் பெற்றது; ஒப்புயர்வற்ற நட்சத்திரமானான், வேலெண்ட்டினோ!

அவனது பேரழகிலே மயங்காத மங்கையர் இல்லையென்றே சொல்லிவிடலாமாம். "பேரழகின் இருப்பிடமே! என்னை உனது காதலியாக ஏற்றுக்கொள்ள மாட்டாயா?"— என்று எழுதிக் கேட்கும் பெண்மணிகள் ஏராளமாம்.

சுமார் இருநூறுக்கு மேற்பட்ட பெண்கள் தங்களது குழந்தைகளுக்கு வேலெண்ட்டினோதான் கனவுலகத் தகப்பன் என்று கருதினார்களாம்!

ஆனாலும் அந்த வசீகரத் தென்றல் அதிக நாட்கள் உயிர் வாழவில்லை. சிறிய வயதிலே; வாலிபப் பருவத்திலே; புகழேணியின் முதல் படியிலே கால் வைப்பதற்குமுன்பு அவன் அடைந்த துன்பங்களெல்லாம் அவனைத் தொடர்ந்தன.

நாடோடியாக அவன் அலைந்த நாட்களில் அவன் அரைப் பட்டினியாக வாழ்ந்ததாலும், சரியான உணவு உட்கொள்ளாததாலும் சிறு குடலிலே வியாதி உருக்கொண்டது. விரைவிலே அதற்குப் பலியாகிவிட்டான், வேலெண்டினோ!

அவனுடைய சவத்தை மணிக்கு 150 பேர் வீதம் இரண்டு நாட்கள் தொடர்ந்தாற்போல்ஜனத்திரள் சென்று கடைசி முறையாகப் பார்த்து வந்ததாம்!

★

# கடைசிப்பக்கம்

நடராசன்; புதுக்கல்லூரி சென்னை.

(?) ஆச்சாரியாரின் பேச்சுக்கு அமெரிக்காவில் மதிப்பு இருக்குமா?

*எப்படி இருக்கும்? சொந்த மாகாணத்திலேயே செல்லாக் காசாகி விட்ட அவரை, ஆயிரக் கணக்கான மைல்களுக்கு அப்பாலுள்ள அமெரிக்காவா மதிக்கப் போகிறது?*

(?) தமிழை வளர்க்க நினைக்கும் தி. மு. க. ஒரு தனித் தமிழ்க் கல்லூரி அமைக்க முற்பட்டால் என்ன?

*ஆல் போல் வளர்ந்து, அருகு போல் தழைத்து, திராவிடத்தின் சிற்றூர்களிலெல்லாம் ஆணிவேர் விட்டிருக்கும் தி. மு. க. வே ஒரு பல்கலைக் கழகமாயிற்றே! அதன் கொள்கைவீரர்களின் பேச்சும் எழுத்துமே ஒரு முத்தமிழ்க் கல்லூரியின் நடவடிக்கைகள் தானே! இந்த நிலையில் தனிக் கல்லூரி ஒன்று அவசியமா, என்ன!*

மூர்த்தி; காரப்பிடாகை

(?) ஒவ்வொருவரும் அவர்களது கட்சியின் முன்னேற்றத்தில் தான் அக்கரை காட்டுகிறார்களே தவிர நாட்டு முன்னேற்றத்தில் கவலை காட்டுவேதில்லையே இதுபற்றி உங்கள் கருத்தென்ன?

*அப்படியல்ல, தோழரே! ஒவ்வொரு கட்சியும் நாட்டு விடுதலையை-முன்னேற்றத்தை நினைவில் கொண்டு பணியாற்ற வேண்டும். தொண்டர்களோ அவர்களது கட்சியின் முன்னேற்றத்தில் கருத்தாயிருக்க வேண்டும்.*

வடிவேலன்; திண்டுக்கல்

(?) மந்திரி சுப்ரமணியம் ஆவடியிலே தமிழில் பேசும் போது, காங்கிரஸ்காரர்களெல்லாம் அவரை ஆங்கிலத்தில் பேசும்படி கூச்சல் போட்டார்களாமே?

*கூச்சல் போடாமல், 'கந்தர்வ கானமாயிருக்கிறது, கனம் அவர்களின் பேச்சு'-என்று சொல்லி தலையையா அசைப்பார்கள்? அந்த வடக்கத்திச் சீமான்கள் கூச்சல் போடாமல், முகத்தில் எச்சலை உமிழ்ந்தால்கூட 'நம்மவர்'களுக்கு சிறிதளவும் 'சொரணை' வராது, நண்பரே!*

சுந்தரம்; பம்பாய்.

(?) தி. மு. க. வின் மாநில மாநாடு எப்போது நடக்கப் போகிறது?

*விரைவில் திருச்சியில் நடைபெற இருக்கிறது.*

அரங்கப்பன்; காரமடை.

(?) திராவிட நாடு கிடைத்தால் அப்போது கோயில்கள் இருக்குமா? வெண்கல மணிகள் இருக்குமா?

*கோயில்கள் இருக்கும்; ஆனால் நிச்சயம் அங்கே கோணல் புத்திக்காரர்களின் சேஷ்டைகள் இருக்காது.*

*வெண்கல மணியோசை கேட்கும்; அதுவும் 'அறிவு மணம் பெற வாரீர்! வாரீர்!' என்றே அழைக்கும்!*

சுப்பன்; தேனும்பேட்டை.

(?) பிரஜா கட்சியின் சோஷலிசத்திற்கும், காங்கிரஸ் கட்சியின் சோஷலிசத்திற்கும் உள்ள வித்தியாசமென்ன?

*இரண்டு 'இசங்களும்' காந்தியம் என்னும் பிற்போக்குக் குட்டையில் ஊறிய மட்டைகள் தான்!*


வெளிவந்து விட்டது!

எஸ். பி. நாதன் எழுதிய

**அந்தப்புரம்**

விலை ரூபாய் ஒன்று

**கருணாநிதி பதிப்பகம்**

143, சாமி நாய்க்கன் தெரு

சிந்தாதிரிப்பேட்டை. சென்னை—2


## பிறைவானம்...

9-ம் பக்கத் தொடர்ச்சி

உணவு தருவீர்களா? இல்லையென்று சொல்லி விடாதீர்கள், ஐயா'' என்று புலம்பினான்.

உருக்குலைந்த உடல் — கலைந்த தலை — கந்தை ஆடை—கலங்கிய கண்கள் — பார்க்கவே பயமாக இருந்த அந்த புதிய மனிதனை அவர் பார்த்தார். ஆனால்...... 'உலகத்துக்கு வேண்டாதவனே! உனக்கு இங்குமட்டும் என்ன வேலை. ஓடிப்போ இதைவிட்டு' என்று துரத்தவில்லை. அதற்கு மாறாக, அவரதுகண்கள்கலங்கின.

''தம்பீ! இது என் வீடுதான். ஆனால், இது எல்லோரையும் வரவேற்கும்; எப்போதும் திறந்திருக்கும். இதோ, என்னிடமிருக்கின்றனவே சொத்துக்கள், இவை எனக்கு மட்டும் சொந்தமல்ல; என்னை நாடிவந்த எவருக்கும் சொந்தம். ஆகவே தம்பீ, அஞ்சாதே! இரவு உனக்கு நிச்சயம் உணவுண்டு; படுக்க இடமுண்டு'' என்றார்,

பெரிய மனிதர் சொன்னபடியே செய்தார். புதிய மனிதன் சாப்பிட்டான். படுத்தான்.

* * *

பொழுது விடிந்தது. அந்த பயங்கரமான இரவு பறந்தே விட்டது. புதிய மனிதன் விழித்துக் கொண்டான். புறப்பட்டான். அந்த அராபிய மனிதர் அவனை வழியனுப்ப வந்தார். வெறுங்கையோடு அல்ல; 'நடப்பதென்ன கனவா; நினைவா?' என்று அவனை கலங்க அடிக்கும் வகையில். எப்படித் தெரியுமா? அவர் தன்னிடமிருந்த தங்கக் கட்டிகள் சிலவற்றை அவனிடம் தந்தார். ''தம்பீ! சென்றுவா. என்ன விழிக்கிறாய்? ஏன் இந்தப் பதட்டம்? பயப்படாதே! இந்தப் பொருள் உனக்குத்தான். நாடு வெறுத்த நீ, இனி நல்லவனாக வாழவேண்டாமா? அதற்குத்தான் இவை. அதோ பார், என் குதிரையை. அதுவும் உனக்காகத்தான் காத்திருக்கிறது; சென்றுவா!'' என்றார்.

இதைக் கேட்டான் அந்தப் புதியவன், ஒரு கணம் அசையாது நின்றான். என்னவோ நினைத்தான்; சிந்தித்தான், சிரிக்க வேண்டிய அவனது முகம் ஏனோ வாடியது. 'வணக்கம் ஐயா' என்று வார்த்த வேண்டிய அவனது உதடுகள் ஏனோ துடிதுடித்தன. சற்றுநேரம் அப்படியே நின்றான். அவன் உடல் ஏனோ படபடத்தது, அவன் வாய் எதைச் சொல்லவோ துடிதுடித்தது, மறுகணம் எதிர்பாராத ஒரு சம்பவம் நடந்துவிட்டது.

அந்தப் புதியவன் சடாரென்று அவரது பாதங்களில் விழுந்தான். விக்கி விக்கி அழ ஆரம்பித்தான். பெரியவருக்கு எதுவுமே புரியவில்லை.

அவன் அழுது கொண்டே சொன்னான், ''ஐயா! வேண்டாம்! வேண்டாம்! இந்தப் பொருள்கள் எனக்கு வேண்டவே வேண்டாம்! இவைகளை நான் எடுத்துக் கொண்டு போகக் கூடாது ஐயா! உங்களுக்குத் தெரியாது. நான் மோசக்காரன் படுமோசக்காரன்! நான்...நான்தான் சொல்லத் துடிக்கிறதே என் உதடுகள்...சொல்லி விடுகிறேன் ... ஐயா ... நான்தான் உங்கள் மகனைக் கொன்றவன். இபுராகிம் என்ற உங்கள் ஆசை மகனைப் பிணமாக்கியவன் நானே தான்...என்று கதறினான். 'கோ' வென்று அலறினான்.

## நன்றி

திராவிடர் திருநாள் வாழ்த்துக்கள் அனுப்பி மகிழ்வித்த கழகத் தோழர்களுக்கும், நண்பர்களுக்கும் என் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

—மு. கருணாநிதி

சிலையாக நின்றார் அவர். நினைத்தால் அப்போதே-அந்தக் கணமே தனது ஒரே மகனின் உயிரைப் போக்கியவனை பழிவாங்கியிருக்கலாம். ஆனால் அவர் செய்ததோ? தனது பெட்டியைத் திறந்தார். இன்னும் தங்கக் கட்டிகளை எடுத்தார். முன்பு கொடுத்ததைப்போல மூன்றுபங்கு அதிகமாக அவன்கைகளில் வைத்தார். ''தம்பீ! விழிக்காதே! வியக்காதே! என் மகனைக் கொன்றவன் நீ என்று தெரிந்தும், பொருள் தருகிறேனே என்று தடுமாறுகிறாய்? தம்பீ! உனக்கு எதற்குத் தண்டனை? இன்றுவரை—இந்த உண்மையைச் சொல்லும் வரை நீ அனுபவித்த வேதனை இருக்கிறதே, அதுவே உனக்குப் பெரிய தண்டனை! போதும்! இனியாவது நீ நல்லவனாக வாழு! போ! போய்விடு!''என்றார்.

மனிதன் எழுந்தான். எதுவும் பேசவில்லை. நகர்ந்தான். வாசலில் நின்றுகொண்டிருந்த குதிரையின் மேல் ஏறினான். குதிரை நகர்ந்தது. அவன்-அந்தத் 'திருந்தியவன்' சென்றுகொண்டிருந்தான். தெருமுனை சென்றதும் திரும்பிப்பார்த்தான். நீர் மறைந்த அவனது கண்களில், குடிசை வாசலில் நின்றுகொண்டிருந்த அந்த மனிதர், தனது கைக்குட்டையை ஆட்டி வழி அனுப்பிக்கொண்டிருந்தது மங்கலாகத் தெரிந்தது.

★

''இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்''

என்ற குறளைப் படித்திருக்கிறீர்கள் அல்லவா? அந்தக் குறளின் கருத்தைத்தான இந்தக் கதையும் சொல்லுகிறது. மகனைக் கொன்றவனையும் 'மனிதனாக வாழு' என்று சொன்னாரே அந்தப் பெரிய மனிதர், அந்தப் பெருந்தன்மையின் பெருமையே பெருமை!

— சொர்ணம்

## ஔரங்கசீப்பின்......

11-ம் பக்கத் தொடர்ச்சி

*இதோ, பதில் அதையும் படியுங்கள்!*

*''இந்த விவகாரத்தைப் பற்றிய என்னுடைய நோக்கங்கள் எல்லோம் அறிந்ததே! அவைகளைப் பற்றியெல்லாம் ரேடியோ ஒலிபரப்பிலும், மற்ற இடங்களிலும், நான் விளக்கமாக எடுத்துரைத்திருக்கிறேன். ஆதலால் அவைகளை விவரிக்க விரும்பவில்லை.''*

*ஹிட்லர் அல்ல, இப்படிப் பதில் சொல்வது; ஜனநாயக இந்தியாவின் மந்திரிகளுள் ஒருவர் இப்படிச் சொல்கிறார்.*

★